
# வட இலங்கையில் சிங்கைநகர்

## [இடம் - காலம் - பெயர்க்காரணம்]

## மீள்பரிசீலனை



ப. புஷ்பரத்தினம்.

1993

# வட இலங்கையில் சிங்கை நகர்

## ( இடம், காலம், பெயர்க்காரணம் )

## மீள்பரிசீலனை

பரமு புஷ்பரத்தினம், M. A.

( சிரேஷ்ட விரிவுரையாளர்,

வரலாற்றுத்துறை,

யாழ். பல்கலைக்கழகம் )

அருட்திரு. ஜி. ஏ. பிரான்சிஸ் யோசெப் அடிகளார்

மணிவிழாச் சபை வெளியீடு

1993

நூல் : வட இலங்கையில் சிங்கை நகர்
( இடம், காலம், பெயர்க்காரணம் )
மீள்பரிசீலனை

ஆசிரியர் : பரமு புஷ்பரத்தினம்

முகவரி : வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

பதிப்பு : முதலாவது பதிப்பு, 1993 - 06 - 30

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : அருட்திரு. ஜி. ஏ. பிரான்சிஸ் யோசெப் அடிகளார்
மணிவிழா மலர்க்குழு

அச்சுப் பதிப்பு : திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

அட்டைப்படம் : சசி

விலை ரூபா : 50.00

# பதிப்புரை

தொன்மைமிக்க ஓர் இனத்தின் வரலாறு உரிய முறையில் தொடுக்கப்படாதுவிடின் அது அவ்வினத்தின் அழிவுக்கே வழிவகுக்கும்.

ஈழத்தமிழினத்தின் வரலாற்று ஆய்வுகள் கடந்த காலங்களில் குறைவாகவே அமைந்தன. திட்டமிட்ட முறையில் அது மூடிமறைக்கப்பட்டமையும், திரிக்கப்பட்டமையும் யாம் அறியாததொன்றல்ல.

யாழ்ப்பாண கல்விவரலாற்றில் ஒரு சகாப்தத்தினை கடந்து மிளிரும் புனித பத்திரிசியார் கல்லூரியில் மூன்று தசாப்தங்களின் மேலாகப் பணிபுரிந்து அதில் பதின்மூன்றாண்டுகள் அதிபராகவும் விளங்கியது மட்டுமன்றி இன்றும் தொடர்ந்து இன, மதபேதமின்றி கல்விப்பணியும், சமூகப்பணியும் குன்றாத உற்சாகமுடன் மேற்கொள்ளும் அருட்தந்தை G. A. பிரான்சிஸ் யோசெப் அடிகளாரின் மணிவிழா வெளியீடாக "வட இலங்கையில் சிங்கைநகர்" என்ற இவ்வரலாற்று நூல் வெளிவருதல் காலத்தின் தேவை கருதி இன்றியமையாததொன்று எனலாம்.

இந்நூலாசான் திரு. ப. புஷ்பரத்தினம் அவர்கள் தமது வரலாற்று ஆய்வு வெளியீடுகள் பலவற்றால் அறிஞர்கள் மத்தியில் குறிப்பிடத்தகு இடம்பெற்றவர். யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேட்டவிரிவுரையாளராக பணியாற்றுபவர்.

மேலும் பலவரலாற்று ஆய்வுக் கட்டுரைகளை சேர்த்து தொகுக்க யாம் முயன்றாலும் நெருக்கடிகள் பல மிகு இக்காலகட்டம் எமக்கு தடைக்கல்லாயிற்று. ஆயினும் ஒரு சிறு வெளியீடாகவே இது அமைந்தாலும் மேலும் பலர் இம்முயற்சிகளில் ஈடுபட இது ஒரு அடித்தளமாக எழுந்தால் அதுவே எம்நோக்கின் வெற்றியாகும்

இந்நூல் குறுகிய காலத்தில் வெளிவர நூலாசிரியர் திரு. ப. புஷ்பரத்தினம் அவர்கள் செய்த உதவியும், அச்சேற்றியுதவிய சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தாருக்கும், இத்தகைய வரலாற்று வெளியீடுகள் அவசியம் என்ற எண்ணக் கருவினை எம்மனதினில் விதைத்த எழுத்தாளர் செங்கையாழியான் அவர்களுக்கும் பல்வேறு முறைகளில் வழிகாட்டியாக அமைந்த "மல்லிகை" ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கட்கும், மணிவிழாக் குழுத் தலைவராக வழிநடாத்திய யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் அவர்களுக்கும், மணி விழாக்குழு உறுப்பினர்க்கும், நிதியுதவியும் வேறுபலவகை உதவிகளும் புரிந்த ஏனைய சான்றோர்க்கும் எம் நன்றி மலர்கள் சமர்ப்பணமாகட்டும்.

**திரு. ச. தில்லைநாதன்**
1993-06-30 **பதிப்பாசிரியர்**

## மலர்க் குழுவினர்

**திருவாளர்கள்**

**த. கலாமணி** (விரிவுரையாளர், கல்வியற்புலம், யாழ். பல்கலை) கழகம்

**சு. செல்வநேசன்** (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி)

**க. இரஞ்சித்** (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி)

**ம. கடம்பேஸ்வரன்** (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி)

# நூலாசிரியருரை

வட இலங்கையில் ஒரு மன்னன் அளுகைக்கு உட்பட்ட சுதந்திர தமிழ் இராசதானி எங்கே, எப்போது யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதைச் சரியாக அறிந்து கொள்வதற்கு முழுமையான சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் இதுவரை கிடைத்த சான்றுதாரங்களை அடிப்படையாகக் கொண்டு நல்லூரைத் தலைநகராகக் கொண்ட இராசதானியொன்று பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பதினேழாம் நூற் நூற்றாண்டின் முற்பகுதிவரை இருந்ததென நிச்சயப்படுத்திக் கூற முடியும். ஆனால் புராதன யாழ்ப்பாணம் என்ற நூலை எழுதிய முதலியார் இராசநாயகம் அவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கதிரமலையெனப்படும் கந்தரோடையைத் தலைநகராகக் கொண்ட அரசு இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரின் கருத்தோடு உடன்படாத பல்கலைக்கழக ஆய்வுகள் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே முதலாவது சுதந்திர தமிழரசு தோன்றியதாக சுட்டிக் காட்டுகின்றன. தமிழரசு தொடர்பாகத் தோன்றிய தமிழிலக்கியங்கள் புகைபடர்ந்த நிலையிற் காணப்பட்டாலும் அவற்றுட் பல எகோபித்த நிலையில் கதிரமலை சிங்கை நல்லூர் ஆகிய தலைநகரங் கொண்ட அரசுகள் காலத்துக்கு காலம் வட இலங்கையில் ஆட்சி புரிந்ததாகக் கூறுகின்றன. வரலாற்று ஆசிரியர்களுள் ஒரு சாரர் இவற்றுள் சிங்கை எனப்படு: நகர் வல்லிபுரத்திலிருந்ததெனவும், இன்னொரு சாரர் நல்லூருக்குள் உள்ளடங்கியிருந்ததெனவும் கூறியுள்ளனர். நாம் இவ்விரு கருத்துக்களோடும் உடன்படாது இந்நூலிற் சிங்கையைத் தலைநகராகக் கொண்ட அரசு யாழ்ப்பாணத்துக்கு வெளியே பூநகரியில் குறிப்பாக வன்னிப் பிராந்தியத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதற்கு பல காரணங்களைச் சுட்டிக் காட் டிக் காட்டியுள்ளோம். இக்காரணங்கள் சில எதிர்கால ஆய்வால் மறுதலிக்கப்படலாம் அல்லது விரிவுபடுத்தப்படலாம் ஆயினும் எல்லாக் காரணங்களையும் புறக்கணிக்க முடியாதென்பதில் எமக்கு அசையாத நம்பிக்கை யுண்டு.

அருட்திரு பிரான்சிஸ் யோசெப் அடிகளாரின் மணிவிழா மலரில் சிறு கட்டுரையாக வரவேண்டிய சிங்கைநகர் பற்றிய விடயம் இன்று ஒரு நூலாக அடிகளாரின் மணிவிழா நினைவாக

வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்நூலை வெளியிட முன்வந்த மணிவிழா மலர்க் குழுவினருக்கும் சிறப்பாக எனது பாடசாலைத் தோழமை ஆசிரியர் திரு. ச. தில்லைநாதன் அவர்களுக்கும் பல்கலைக் கழக விரிவுரையாளர் நண்பன் திரு. தி. கலாமணி அவர்களுக்கும் என் நன்றிகள்.

சிங்கைநகர் பற்றிய இந்நூல் பூநகரிப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின் பெறுபேறாகும். இவ்வாய்வுக்குப் பல நிலைகளிலும் துணையாக நின்ற பெருமதிப்புக்குரிய துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கும், முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும், தற்போதைய பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி கூறுவது என் கடமையாகும்.

பூநகரிப் பிராந்தியத் தொல்லியல் ஆய்வின் பெறுபேறுகளை நூல் வடிவில் வெளிவரப் பெருந் துணையாக இருந்த மொழியியல் பேராசிரியர் சு. சுசீந்திரராஜா அவர்களுக்கும் பேராசிரியர் வி. சிவசாமி அவர்களுக்கும் வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி சி. க, சிற்றம்பலம் அவர்களுக்கும், இந் நூலை அழகுற அச்சிட்ட சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தாருக்கும் என் நன்றிகள்.

புத்தூர் ப. புஷ்பரத்தினம்

## 1

வரலாற்று ரீதியாக இனம், மொழி, பண்பாடு ஆகியவற்றால் பெருமளவுக்குச் சிங்கள மக்களிலிருந்து வேறுபட்டு வாழ்ந்த தமிழ் மக்கள் தமது தாயகத்தில் ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட சுதந்திர அரசை எங்கே, எப்போது அமைத்துக் கொண்டார்கள் என்ற கேள்விகளுக்கான விடைகள் இன்று வரை வரலாற்று அறிஞர்களிடையே முரண்பட்டுக் காணப்படுகின்றன. தமிழரசு தொடர்பாகத் தோன்றிய தமிழிலக்கியங்கள் புகைப்படர்ந்த நிலையிற் காணப்பட்டாலும் அவை ஏகோபித்த நிலையில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு ஒன்று தோன்ற முன்னர் சோழர் வருகையோடு கதிரமலையிலிருந்த (கந்தரோடை?) அரசு சிங்கை நகருக்கு மாற்றப்பட்டதாகச் சூசமாகத் தெரிவிக்கின்றன. இவ்விலக்கியங்களைப் பிரதான வரலாற்று மூலங்களாகக் கொண்டு தமிழரசு பற்றி ஆராய்ந்த முதலியார் இராசநாயகம்[1], சுவாமி ஞானப்பிரகாசர்[2] போன்ற அறிஞர்கள் கி. பி. 8ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட அரசொன்று கதிரமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததாகக் கருத்துத் தெரிவித்தனர். பிற்காலத்தில் இக்கருத்துக்களுடன் பெருமளவுக்கு உடன்படாத பேராசிரியர் இந்திரபாலா[3], பேராசிரியர் பத்மநாதன்[4] போன்ற அறிஞர்கள் தமிழ் இலக்கியங்களையும், பாளி, சிங்கள இலக்கியங்களையும், ஓரளவுக்குத் தொல்லியற் சான்றுகளையும் ஆதாரமாகக் கொண்டு முதலாவது சுதந்திரத் தமிழரசு 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு தோன்றியதெனக் கூறினர். இக் கருத்தே இன்று கற்றோர் மத்தியிற் பரவலாக ஏற்கப்பட்டும் வருகின்றது.

## 2

தமிழரசு தோன்றிய இடம், தோன்றிய காலம் பற்றிய பிரச்சினைகள் எழுவதற்கு அவ்வரசு பற்றிக் கூறும் இலக்கியங்களில் அதன் தலைநகர் வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுவதும் ஒரு காரணமாகும். இவ்வரசு தொடர்பாகத் தோன்றிய காலத்தால் முந்திய செகராசசேகரமாலை, செகராசசேகரம் முதலான தமிழ் நூல்கள் இவ்வரசின் ஆரம்ப காலத் தலைநகர்

சிங்கை அல்லது சிங்கைநகர் எனவும்,[5] சிங்கள இலக்கியங்கள் யாப்பாபட்டுண (யாழ்ப்பாணம்) எனவும்,[6] கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, தட்சணகைலாயமாலை முதலிய தமிழ் நூல்கள் நல்லூர் எனவும் கூறுகின்றன.[7]

இச் சான்றுகள் வேறுபட்ட தலைநகரின் கீழ்த் தமிழரசு இருந்திருக்கலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. ஆயினும் தற்போது நல்லூரைத் தவிர இராசதானிக்குரியதெனக் கருதக் கூடிய கட்டிட அழிபாடுகள் எவையும் யாழ்ப்பாணத்தில் வேறு இடங்களிற் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 16ஆம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வந்த போது நல்லூர் நகரத்தையே கண்டனர் என அறிகிறோம். இது சம்பந்தமாக கேய்றோஸ் பாதிரியார் கூறியது கவனிக்கத் தக்கது.

> "நல்லூரை விட வேறு நகரம் ஒரு போதும் அவர்களுக்கு இருக்கவில்லை. இது போத்துக்கேயருடைய பட்டினமும் அங்காடியும் அமைந்துள்ள இடத்தில் இருந்து அரை லீக் (ஏறக்குறைய $1\frac{1}{2}$ மைல்) தூரத்தில் இருக்கிறது."[8]

இவர் குறிப்பிடுகின்ற பட்டினமும், அங்காடியும் தான் பிற்பட்ட காலத்தில் யாழ்ப்பாண நகரமாக மாறியது. இவ்விடத்திலிருந்து ஏறக்குறைய மூன்று மைல் தூரத்தில் நல்லூர் இருக்கிறது. எனவே போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வந்த காலத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு ஒன்று இங்கிருந்ததெனக் கூறலாம். அப்படியாயின் யாழ்ப்பாணமும், சிங்கையும் இதற்கு முற்பட்ட தமிழ் இராசதானியின் தலைநகரங்களா என்ற கேள்வி எழுகின்றது.

## 3

கைலாயமாலையிற் புவனேகபாகு என்ற தமிழ் மந்திரியே யாழ்ப்பாண நகரத்தை அமைத்தவன் எனக் கூறப்பட்டுள்ளது. இந்நூலில் இடம்பெறும் தனிச் செய்யுளை ஆதாரமாகக் கொண்டு இவன் காலத்தைப் பத்தாம் நூற்றாண்டென கணிப்பிட்டுள்ளனர்.[9] ஆனால் இலங்கையிற் புவனேகபாகு என்ற பெயருடன் ஏழு மன்னர்கள் ஆட்சி செய்ததற்குச் சான்றுகளுண்டு. இவர்களுள் 15ஆம் நூற்றாண்டில் 6ஆம் பராக்கிரம

பாகு கோட்டையில் ஆட்சிசெய்த காலத்தில் மலையாளப் பணிப் பெண்ணுக்கும் சிங்களப் பிரதானிக்கும் மகனாகப் பிறந்த செண்பகப் பெருமாள் (சம்புமால் குமாரயா) கி. பி. 1450இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 17ஆண்டுகள் (1450—1467) புவனேகபாகு என்ற பெயருடன் ஆட்சி செய்ததாகத் தெரிகிறது. இதை யாழ்ப்பாணப் பிரதான வீதியிற் கிடைத்த இவன் ஆட்சிக் காலக் கல்வெட்டும் உறுதி செய்கிறது.[10]

இன்றும் நல்லூர்க் கட்டியத்தில் இடம்பெறும் சர்ப்புமால், ஸ்ரீ சங்கபோதி, புவனேகபாகு போன்ற பெயர்கள் இச் செண்பகப் பெருமாளையே குறிப்பதாகும். இதனாற் கைலாயமாலையில் வரும் புவனேகபாகுவைப் பத்தாம் நூற்றாண்டுடன் எடுத்துக் கொள்வது பொருத்தமாகத் தெரியவில்லை. அதேவேளை அவன்தான் யாழ்ப்பாண நகரத்தை முதலில் அமைத்தவன் எனக் கூறுவதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. ஏனெனில் இவன் 1450இற் படையெடுக்க முன்னரே யாழ்ப்பாணம் தலைநகரமாக விளங்கிதற்குச் சான்றுகள் உண்டு. கி. பி. 1435ஆம் ஆண்டுக்குரிய திருமானிக் குழிக் கல்வெட்டு இந்நகரை இஆழ்பானாயன் பட்டினம் எனவும்,[11] 15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குரிய திருப்புகழ் யாழ்ப்பாணயன் பட்டினம் எனவும்[12] சிங்கள ஸந்தேஸய நூல்கள் யாபாபடுன எனவும்[13] அழைத்துள்ளன. இவை செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முன்னரே அது தலை நகராக விளங்கியதென்பதை எடுத்துக் கூறுகின்றன. ஆயினும் இதை நல்லூரில் இருந்து வேறுபட்ட ஒரு தலைநகராகக் கொள்வது பொருத்தமாகத் தெரியவில்லை. நல்லூரும், யாழ்ப்பாணமும் அருகருகே இருப்பதனால் யாழ்ப்பாணம் நல்லூரை அல்லது நல்லூரின் ஒரு பாகத்தைக் குறித்திருக்கலாம் எனக் கருதுவது பொருத்தமாகும்.[14] தென்னிந்தியாவிலிருந்து ஏற்பட்ட படையெடுப்புகள் யாழ்ப்பாண அரசிற்கு அச்சுறுத்தலாக இருந்ததற்குச் சான்றுகளுண்டு.[15] இதனால் யாழ்ப்பாணத்திலிருந்த இராசதானி பாதுகாப்புக் கருதி நல்லூருக்கு மாற்றப்பட்டு இருக்கலாம். ஆயினும் இதையொரு தலைநகர் மாற்றமாகக் கூறமுடியாது. அப்படியாயின் ஆரம்பத் தலைநகர் சிங்கை எங்கிருந்ததென்ற கேள்வி எழுகின்றது.

முதலியார் இராசநாயகம் செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி நல்லூரை இராசதானியாகக் கொள்ளும் வரை சிங்கையே தமிழ் அரசின் தலைநகர் எனவும், அது வல்

லிபுரத்தில் அமைந்திருந்ததெனவும் கூறியுள்ளார். இக் கருத்தை ஏற்ற சுவாமி ஞானப்பிரகாசர் அதற்குச் சார்பாக வல்லிபுரத்திற் காணப்பட்ட பழமையான வரலாற்றுச் சின்னங்களை எடுத்துக் காட்டினார்.[17] இச்சின்னங்களைப் பழமையான நாகரிகத்தின் எச்சங்களாக எடுத்துக் கொள்ளலாமே தவிர ஓர் இராசதானியின் அழிபாட்டுச் சின்னங்களாக எடுத்துக் கொள்ள முடியாது. இவ்வாறான நாகரிக எச்சங்கள் வல்லிபுரத்தில் மட்டுமன்றிக் கந்தரோடை, ஆனைக்கோட்டை, களபூமி, பூநகரி போன்ற இடங்களிலும் காணப்படுகின்றன. இதனாற் சிங்கை இராசதானியை வல்லிபுரத்துடன் தொடர்புபடுத்துவது பொருத்தமாகத் தெரியவில்லை.[18]

பேராசிரியர் இந்திரபாலா சிங்கை என்பது நல்லூரில் இருந்து வேறுபட்ட தலைநகரைக் குறிக்காது அதுவும் யாழ்ப்பாணத்தைப் போல் நல்லூரை அல்லது நல்லூரின் ஒரு பாகத்தைக் குறித்திருக்கலாம் என்றார். இதற்குச் சார்பாகச்சில ஆதாரங்களைக் காட்டியுள்ளார். (1) 1435 இற் பொறிக்கப்பட்ட திருமாணிக் குழிக் கல்வெட்டில் யாழ்ப்பாணப் பட்டினமும் 1449க்கும் 1454க்கும் இடைப்பட்ட கால அரிகேசரி பராக்கிரமபாண்டியன் கல்வெட்டில் சிங்கையும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏறத்தாழ ஒரே காலகட்டத்திற்குரிய இரு கல்வெட்டுக்களில் தமிழ் மன்னர்களின் இராசதானிகள் அமைந்த இடமாக யாழ்ப்பாணமும், சிங்கையும் கூறப்படுவதால் இரண்டையும் ஒன்றெனக் கூறலாம், (2) 1590இற் போர்த்துக்கேயர் கொழும்புத்துறையில் இறங்கி நல்லூரை நோக்கி அணி வகுத்துச் சென்றபோது சுங்கைநயினார் என்னும் அரணைத் தாண்டிச் சென்றதாக கேய்றோஸ் பாதிரியார் கூறியுள்ளார். இதிற் கூறப்பட்டுள்ள சுங்கைநயினார், சிங்க நயினாரின் திரிபு எனக் கூறமுடியும். இதனாற் சிங்கையும் யாழ்ப்பாணத்தைப் போல நல்லூருக்கு அருகிலிருந்த ஓர் இடமெனக் கூற முடிகிறது.[19]

மேற்குறிப்பிட்ட இரு காரணங்களும் சிங்கையை நல்லூருடன் இணைத்துக் கூறினாலும் அக்காரணங்களை வேறுபடுத்தி ஆராயவும் இடமுண்டு. முதலாவதாக ஒரே காலகட்டத்துக்குரிய இரு கல்வெட்டுக்களிற் சிங்கையும், யாழ்ப்பாணமும் வருவதைக் கொண்டு அவையிரண்டும் ஒன்றையே குறித்ததெனக் கொண்டாலும் அவை வேறுபட்ட தலைநகரங்கள் எனக் கூறவும் இடமுண்டு. அரிகேசரி பராக்கிரமபாண்டியன் கல்வெட்டிற் சிங்கை

யுடன் அநுராதபுரமும் (அநுரை) குறிப்பிடப்பட்டுள்ளது.[20] கோட்டகமத் தமிழ்ச் சாசனமொன்றில் ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்களால் தோற்கடிக்கப்பட்ட சிங்கள மன்னர்களின் தலை நகர் அநுராதபுரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[21] இவ்விரண்டு கல்வெட்டுக்களும் இலங்கையின் ஆரம்ப காலத் தலைநகராக இருந்த அநுராதபுரம் கைவிடப்பட்டு 500 ஆண்டுகளின் பின்னர் பொறிக்கப்பட்டவையாகும். அப்படியிருந்தும் சிங்கள மன்னர்களின் இராசதானியின் தலைநகராக அநுராதபுரமே கூறப்பட்டுள்ளது. அதுபோல நல்லூர் தலைநகராக இருந்த காலத்திலும் ஆரம்பத் தலைநகரை நினைவுபடுத்தச் சிங்கை குறிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இதனால் ஒரேகால கட்டக் கல்வெட்டிற் சிங்கையும், யாழ்ப்பாணமும் வருவதைக் கொண்டு அவையிரண்டும் ஒன்றெனக் கூறுவதை ஏற்பது கஸ்ரமாகவே தோன்றுகிறது. இரண்டாவதாகப் போர்த்துக்கேய ஆசிரியர் கூறிய சுங்கை நயினார் அரணை சிங்கைநயினார் அரணின் திரிபு எனக் கூறுவது பொருத்தமாயினும் அதை ஓர் இராசதானிக்குரிய அரண் எனக் கூறி அதுவே சிங்கநகர் என அடையாளம் காண்பது பொருத்தமாகத் தெரியவில்லை. இவ்வரண் இருந்ததாகக் கூறப்படும் இடம் கடற்கரையை அண்டிய இடமாக இருப்பதாற் கடல் பிராந்தியங்களில் இருந்து ஏற்படும் எதிரிகளின் அச்சுறுத்தல்களைக் கண்காணிக்கச் சிங்கை தலைநகராக இருந்த காலத்தில் அமைக்கப்பட்ட காவலரண்களில் ஒன்றாக இருக்கலாம். அல்லது நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மன்னர்கள் பழைய தலைநகரை நினைவுபடுத்தும் வகையில் தாம் கட்டிய காவல் அரணுக்கோ அல்லது வேறு கட்டிடப் பகுதிக்கோ சிங்கை நயினார் எனப் பெயரிட்டிருக்கலாம். எவ்வாறாயினும் இதையொரு இராசதானிக்குரிய மிகப் பெரிய கட்டிடமாகக் கூற முடியாது. நல்லூர் தலைநகராக இருந்ததென்பதை அங்கு தொல்லியல் அகழ்வாய்வு (Excavation) மேற்கொள்ளப்படாமலே தற்செயலாகக் கிடைத்து வரும் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆனாற் சிங்கை நயினார் அரண் இருந்ததாகக் கூறப்படும் நல்லூருக்கும் கொழும்புத்துறைக்குமிடையே ஆதிக் குடியிருப்புக்குரிய பல சான்றுகள் கிடைத்த போதிலும்[22] கூடத் தற்செயலாகத் தானும் ஓர் இராசதானிக்குரிய அழிபாடுகள் கிடைத்ததாகத் தெரியவில்லை. இதனாற் போத்துக்கேய ஆசிரியர் கூறிய சுங்கை நயினார் அரணைச் சிங்கை நகர் என அடையாளம் காண்பது பொருத்தமற்றதாகவே தெரிகிறது. அப்படியாயின் சிங்கை யாழ்ப்பாணத்திற்கு வெளியேயிருந்த தலைநகரா என்ற கேள்வி எழுகின்றது, அவ்வாறான கேள்விக்குப் பல காரணங்கள் உண்டு.

## 5

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அரசொன்று தோன்றுவதற்கு இலங்கை மீது படையெடுத்த பாண்டியப் படைத்தளபதிகளான ஆரியச் சக்கர வர்த்திகளே காரணம் எனக் கூறப்படுகிறது. ஆனால் ஆரியச் சக்கரவர்த்திகளது ஆட்சி நல்லூரில் ஏற்படமுன்னர் கலிங்கமாகன், சாவகன், அவனது மைந்தன், பாண்டியர் ஆகியோர் ஆட்சிக்கால அரசொன்று யாழ்ப்பாணத்திற்கு வெளியே யிருந்ததைப் பாண்டியக் கல்வெட்டுக்களும், இலங்கை வரலாற்று நூலான சூளவம்சமும் கூறுகின்றன. இதனால் தமிழரசின் ஆரம்ப காலத் தலைநகரான சிங்கை அல்லது சிங்கநகரை யாழ்ப்பாணத்திற்கு வெளியேயிருந்த அரசுடன் தொடர்பு படுத்திப் பார்க்கவும் இடமுண்டு.

கி. பி. 1215இல் தென்னிந்தியாவிலிருந்து 20,000 தமிழ், கேரளப் படைகளுடன் இலங்கை மீது படையெடுத்த கலிங்க மாகன் பொலநறுவையைக் கைப்பற்றி 21 வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்ததாகத் தெரிகிறது.[23] இவனை ஒரு தமிழ் மன்ன னாகக் கூறும் பாளி, சிங்கள இலக்கியங்களில் இவன் சிங்கள மக்களுக்குச் சொந்தமான கிராமங்கள், வயல்கள், வீடுகள், தோட்டங்கள், அடிமைகள், மாடுகள், எருமைகள் முதலியவற் றைப் பறித்துத் தன் படை வீரர்களுக்குக் கொடுத்தான் எனவும், விகாரைகள், வழிபாட்டிடங்களைத் தன் படைவீரர்களின் இருப் பிடங்களாக மாற்றினான் எனவும் கூறுகின்றன.[24] இவனை ஒரு வீர சைவனாகக் கூறும் வரலாற்று ஆசிரியர்கள் மட்டக்களப்பில் இம் மதம் வளர்ச்சியடைய இவன் ஆட்சிக்காலமே காரணம் எனவும் கூறுவர். இவனுடைய ஆட்சி தமிழருக்குச் சார்பாக இருந்ததினால் இவன் மீது வெறுப்படைந்த சிங்கள மக்கள் 250 ஆண்டுகள் தலைநகராக விளங்கிய பொலநறுவையைக் கைவிட்டுத் தெற்கு நோக்கி நகரத் தொடங்கினர். இதன் விளை வாகப் புதிய சிங்கள இராசதானியாகத் தம்பதேனிய தோற்றம் பெற்றது. இதன் மன்னனாக இருந்த இரண்டாம் பராக்கிரம பாகு பாண்டியரின் உதவியைப் பெற்று 1236இன் பின்னர் பொலநறுவையில் இருந்த மாகனை ஆட்சியிலிருந்து அகற்றினான். ஆயினும் சிங்கள மன்னர்களால் தொடர்ந்தும் பொலநறுவை யில் இருந்து ஆட்சி செய்ய முடியவில்லை. இதற்குப் பதவி நீக்கப் பட்ட மாகன் தலைமையில் சிங்களவருக்கு எதிரான அரசொன்று

வட இலங்கையில் தோன்றியிருந்ததே காரணமாகும். இவ்வரசு எங்கிருந்தது என்பதைக் கூறமுடியாவிட்டாலும் அவனும் தமிழ், கேரளப் படைகளும் நிலைகொண்டிருந்த இடங்களிற் பல வட இலங்கையில் இருந்ததென்பதை சூளவம்சத்தில் இருந்து அறிய முடிகிறது.

இக்கால கட்டத்தில் தான் சாவக மன்னன் சந்திரபானுவின் முதலாவது படையெடுப்பு இடம்பெற்றது. இப்படையெடுப்பை 2ஆம் பராக்கிரமபாகு முறியடித்தாலும் தோல்வியடைந்த சந்திரபானு கலிங்க மாகனிடம் அபயம் பெற்றோ ஆதரவு பெற்றோ மாகனின் பின் வட இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதாகத் தெரிகிறது.[25] சிங்கள மன்னர்களுக்கு எதிரான இவனின் இரண்டாவது போராட்டம் வடக்கிற் சுதந்திர அரசனாக இருந்து மேற்கொண்டதாக தெரிகிறது. இது பற்றி இலங்கை வரலாற்று மூலங்களில் நேரடியான சான்றுகள் காணப்படாவிட்டாலும் சமகாலத்துப் பாண்டியக் கல்வெட்டுகளில் தெளிவான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் 1263இலும் 1264இலும் பொறிக்கப்பட்ட இரு பாண்டியக் கல்வெட்டுக்கள் இலங்கையில் இரு மன்னர்கள் இருந்தார்கள் என்பதையும், அவர்களுள் ஒருவன் சாவகன் (சந்திரபானு) என்பதையும் அறிவிக்கின்றன. இதில் 1264இற் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டிலே வீரபாண்டியன் இலங்கை மீது படையெடுத்தது பற்றி விரிவான வர்ணணை இடம்பெறுகிறது. இக் கல்வெட்டில் இருந்து நாம் பெறக்கூடிய சான்றுகள் பற்றி நீலகண்ட சாஸ்திரி கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

> "இலங்கையில் ஏதோ ஒரு தகராறு தோன்றியது என்றும் அமைச்சர்களுள் ஒருவன் பாண்டியர்களைக் கேட்டிருந்தான் என்றும், மன்னனின் நோக்கம் (வீரபாண்டியன்) பழைய அரசியல் முறையை முறைப்படி நிலை நாட்டுவதே என்றும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஈழத்து மன்னர்களில் ஒருவன் போர்க்களத்திலே கொல்லப்பட்டான் என்றும் அவனுடைய படைகள், செல்வம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன என்றும் அதன் பின் இரட்டைக் கயல் (பாண்டிய இலட்சினை) திரிகூடகிரியிலும், கோண மலையிலும் பறக்கின்ற கொடிகளிலே பொறிக்கப்பட்டதென்றும் (இலங்கையில்) இன்னுமொரு மன்னன் தன் யானைகளைத் திறையாகக் கொடுத்துச் சரணடைய நேரிட்டதென்றும், மேலும் கூறப்பட்டது. இறுதியாக

முன்னர் கட்டளையை மீறிப் பகைமை காட்டி நின்ற சாவகன் மைந்தன் (வீரபாண்டியன் முன்னிலையில்) வந்து வீழ்ந்து வணங்கி உரிய வெகுமதியைப் பெற்றான் என்றும் கூறப்பட்டது. சாவகனுடைய மைந்தனுக்கு வீரக்கழல் வழங்கப்பட்டு அவன் யானையில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டான் என்றும் முன்னர் தந்தையாண்ட பரந்த இலங்கையைத் தனயன் ஆள்வது முறையென எண்ணி அவனை உடனடியாக அநுராதபுரிக்குச் செல்ல அனுமதித்தான் என்றும் இவ்வாசகத்தை வாசித்து என்னால் விளங்கக் கூடியதாக இருக்கிறது.''[26]

இதில் இருந்து இரு மன்னர்களிடையே ஏற்பட்ட தகராற்றைத் தீர்க்க ஓர் அமைச்சன் (சிங்கள அரசின்) பாண்டியர் உதவியை நாடினான் என்பதும், இதில் ஒரு மன்னன் (சாவகன்) போர்க்களத்திற் கொல்லப்பட மற்றைய மன்னன் (சிங்கள அரசன்) பாண்டியருக்குப் பணிந்து திறை கொடுத்தான் என்பதும், இவனைப் போல சாவகனின் மைந்தனும் பாண்டியர்களின் மேலாணையை ஏற்று மீண்டும் வட இலங்கையில் அரசமைத்தான் என்பதும் தெரிகிறது. இவ்வாறு சாவகன் அமைத்த வட இலங்கையின் அரசையே பின்பு பாண்டியப் பிரதானிகளும் ஆட்சி செய்தனர்.

இச்சான்றுகள் அனைத்தும் பொலநறுவையின் வீழ்ச்சிக்கும் யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் எழுச்சிக்கும் இடைப்பட்ட காலத்தில் மாகன், சந்திரபானு, அவன் மைந்தன், பாண்டியப் பிரதானிகள் போன்றோரின் ஆட்சி வட இலங்கையில் இருந்ததென்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆனால் இவர்களின் அரசு எங்கேயிருந்ததென்பதற்கு இதுவரை சரியான சான்றுகள் கண்டு பிடிக்கப்படவில்லை. சிலர் திருக்கோணமலை எனவும், வேறுசிலர் யாழ்ப்பாணம் எனவும் ஊகம் தெரிவித்துள்ளனர்.

இவர்களுட் பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் மாகனைத் தோற்கடித்த சிங்களப் படைகள் பொலநறுவையை நிரந்தரமாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாமையினால் மாகனின் அதிகாரபீடம் பதவியாவாக இருக்கமுடியும் எனக் கூறியுள்ளார்.[27] இதற்கு மாகனின் படைகள் நிலை கொண்ட இடங்களில் சில இங்கிருக்கலாம் எனக் கருதியதும் மற்றொரு காரணமாகும். ஆனால் இதுவரை வரலாற்று ஆசிரியர்களினதோ,


தொல்லியலாளரினதோ கவனத்தை அதிகம் ஈர்க்காத பூநகரியி லும் அதையண்டிய ஏனைய பிராந்தியங்களிலும் எம்மாற் பெறப்பட்ட சான்றுகளை நோக்கும் போது மேற்குறிப்பிட்ட மன்னர்களின் அரசு இங்கிருந்திருக்கலாம் எனக் கருத இடமளிக் கிறது. போர்த்துக்கேயராற் புநெறிம் (பூநகரி) என அழைக்கப் பட்ட இப்பிராந்தியத்திற்குரிய பெயர் தற்போது பூநகரியின் எல்லைக்கு அப்பால் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்திலும், வடமேற்குப் பகுதியிலும் உள்ள குளங்கள் இப் பெயரைப் (புநெறிம் குளம்) பெற்றிருப்பதால் அக்காலத்திற் பூநகரிப் பிராந் தியத்தின் எல்லைகள் தற்காலத்தை விட விரிவடைந்து இருக்க லாம் எனக் கொள்ள இடமுண்டு.

இப்பிராந்தியத்தில் ஓர் இராசதானி இருந்ததெனக் கருதக் கூடிய கட்டிட அழிபாடுகள் தற்போது தென்னியங்குளப் பகுதி யில் உள்ள செழியாவில், மூங்குவில், நீராவி போன்ற இடங் களிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[28] ஏறக்குறைய ஒன்றரை மைல் சுற்றளவுக்குள் 12இற்கு மேற்பட்ட கட்டிட அழிபாடுகள் காணப் படுகின்றன. இவற்றைத்தவிர இவ்வெல்லைக்குள்ளேயும், எல்லைக்கு வெளியே பாண்டியன் குளம் என்ற இடத்திலும் சில கட்டிடங்கள் இருப்பதாகத் தெரிகிறது. உயர்ந்த கருங்கற் தூண் களையும் (சராசரி 9') செங்கட்டிகளையும் கொண்ட இக் கட்டடத் தொகுதிகள் காடுகளின் மத்தியில் உயர்ந்த மண் மேடுகளாகக் காட்சியளிக்கின்றன. இக் கருங்கற் தூண்களில் உள்ள




செழியாவில் காட்டுப்பகுதியிலுள்ள புராதன கட்டிட அழிபாடுகள்

புடைப்புச் சிற்பங்களின் கலை மரபைக் கொண்டு இக்கட்டிடத் தொகுதிகள் மிகப்பழமையானது என்பதை நிச்சயப்படுத்த முடிகிறது. இக்கட்டிடத் தொகுதிகள் சிலவற்றி லிருந்துஇந்து



புராதன கட்டிடத்திலுள்ள புடைப்புச் சிற்பங்கள்



புராதன கட்டிடத்திற்குப் பயன்படுத்தப்பட்ட ஓடுகள்

விக்கிரகங்கள் பல எடுக்கப்பட்டு அண்மையில் உள்ள துணுக்காய் விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருப்பதாக அறிய முடிகிறது. அது உண்மையாக இருக்கலாம் என்பதை எமக்குக் கிடைத்த

சில சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. மிகக்குறுகிய சுற்று வட்டத்துக்குள் இவ்வளவு பெருந்தொகையான கட்டிட அழி பாடுகள் காணப்படுவதைக் கொண்டு அக்காலத்தில் இவ்விடம் இராசதானியின் தலைநகரமாக இருந்திருக்கலாம் எனக் கூற முடியும். அப்படியாயின் யாழ்ப்பாணத்திற்கு முன்னோடியான இராசதானி இதுவெனக் கூறலாம். இதற்கு இக்கட்டட அழி பாடுகள் மட்டுமன்றி அக்கால மன்னர்கள் தொடர்பான சான்றுகள் பலவும் இப்பிராந்தியத்துடன் இணைந்து வருவதை இங்கே சிறப்பாகக் காட்டலாம்.

பாளி, சிங்கள இலக்கியங்கள் 2ஆம் பராக்கிரமபாகுவினாற் பொலநறுவையில் இருந்து அகற்றப்பட்ட கலிங்கமாகன் வட இலங்கையில் எங்கு அரசமைத்துக் கொண்டான் எனக் கூறா விட்டாலும், அவனது தமிழ் கேரளப்படைகள் நிலைகொண்டி ருந்த இடங்கள் பற்றிக் கூறுகின்றன. இவற்றுட் சூளவம்சம் மாகனின் கோட்டைகள், அவன் படைகள் நிலை கொண்ட இடங் களாக கோட்ட சாறா (கொட்டியாறு) கன்கதாத (கந்தளாய்) காகால (கவுருல) பதி (பதவியா) குருந்தி, மாகதீர்த்த (மாதோட்டம்), மன்னாறபட்டினம் (மன்னார்) புலச்சேரி, வலிகாமம், கோணா (திருமலை) மடுபாத பதித்த (இலுப்பைக் கடவை) சூற தீந்த்த (ஊர்காவற்றுறை) முதலியவற்றைக் குறிப் பிட்டுள்ளது. [29]

இதிற் கூறப்பட்டுள்ள மன்னார், மாந்தை, குருந்தி, இலுப் பைக்கடவை, ஊர்காவற்றுறை, வலிகாமம் போன்ற இடங்கள் தற்போது வடமேற்கு இலங்கையில் உள்ள இடங்கள் என்பதை இலகுவாக அடையாளம் காண முடிகிறது. இதில் வலிகாமம் என்ற இடம் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு நிர்வாகப் பிரிவைக் குறிப்பதாலும் மணற்பாங்கான இடங்கள் சிங்கள மொழி யில் வலிகாமம் என அழைக்கப்பட்டதால் முன்பு இப்பெயர் பூநகரிக்கும் மாந்தைக்கும் இடைப்பட்ட பிராந்தியத்தில் உள்ள ஓர் இடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இதற்குப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்த்திரி சோழர் இலங்கையில் வெற்றி கொண்ட வலிகாமம் மாந்தைக்கு ஐந்து மைல் தொலைவில் இருந்ததாகக் கூறியிருப்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. [30] மேலும் இதிற் கூறப்பட்டுள்ள குருந்தி தென்னியங் குளத்திற்கு சற்று தென்மேற்காக உள்ள குருந்தன் குளத்தையும், மடுபாத பதித்த என்ற இடம் இதற்குக் கிட்ட உள்ள இலுப்பைக் கடவை யையும் குறிக்கிறது. இதில் வரும் காகால என்ற இடத்தைச்

சிலர் கொக்காவில் எனவும், வேறு சிலர் கட்டுக்குளம் எனவும் அடையாளம் கண்டுள்ளனர்.[31] இது உண்மையில் தென்னியங் குளத்திற்குக் கிட்டேயுள்ள காக்கயன் குளத்தையே குறிக்கிற தெனலாம். (பாளியில் காகாலா என்பது காகங்கள் தரித்து நிற்கும் இடத்தைக் குறிப்பதாகும்) இதே போன்று கோண என்ற மாவட்டத்தைத் திருக்கோணமலை என அடையாளம் காணப்பட்டுள்ளது. இது சிலவேளை பூநகரியின் எல்லைப் பகுதியில் உள்ள கோணமலை அல்லது கோணவில் போன்ற இடங் களில் ஒன்றைக் குறித்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இதில் வரும் மற்றொரு இடமான புலச்சேரி எந்த இடத்தைக் குறிக் கின்றதென்பதை வரலாற்று அறிஞர்கள் அடையாளம் கண்ட தாகத் தெரியவில்லை. பூநகரி ஈழ ஊருக்கு மேற்காகக் கடற் கரையை அண்டியுள்ள பகுதியிற் புலையர் குடா, பறைமோட்டை (புலையர் குளம்), பறைய காடு (புலையர் காடு) போன்ற இடங்கள் தொடர்ச்சியாக காணப்படுகின்றன. இது மாகன் படைகள் நிலை கொண்ட புலச்சேரியாக இருக்கலாம்.[32] எனவே மாகனது அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான இடங்களை நோக்கும் போது அவற்றுட் பெரும்பாலானவை பூநகரிக்கும் மன்னாருக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இருந்ததெனக் கூற லாம். இவற்றின் அமைவிடங்கள் மாகனுக்குத் தேவையான படை வீரர்களைத் தமிழ் நாட்டிலிருந்து கடல் வழிமூலம் இங்கு கொண்டுவர வாய்ப்பாக இருந்துள்ளது. அதனாற் தான் அவனின் முக்கிய கோட்டைகளில் ஒன்று ஊர்காவற்றுறையில் இருந்தது.

மாகானின் பின் வட இலங்கையை ஆண்ட சாவக மன்னன் சந்திரபானு தம்பதேனிய அரசுக்கு எதிராக இரண்டாம் முறை படையெடுக்க முன்னர் சில அரசியல் முயற்சியில் ஈடுபட்டதாக தெரிகிறது. இவன் பாண்டி நாட்டில் இருந்தும் சோழநாட்டிலி ருந்தும் தமிழ்க் கூலிப்படைகளைத் திரட்டிக் கொண்டு மாந்தை யில் வந்திறங்கி பதி, குருந்தி மாவட்டங்களில் வசித்த மக்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டதாகச் சூளவம்சம் கூறுகிறது. இதிற் கூறப்பட்ட குருந்தி என்ற இடத்தை வரலாற்று அறி ஞர்கள் சிலர் முல்லைத்தீவுக்கு வடக்கே பதவியாவுக்குக் கிட்ட வுள்ள [33] குருந்தனூர்மலை என அடையாளம் கண்டுள்ளனர். ஆனால் மாந்தைக்கு வடக்கே தென்னியங்குளத்துக்கு கிட்ட உள்ள ஒரு பழைய கிராமம் குருந்தன் குளம் என அழைக்கப் படுகிறது. கடற்பிரயாணங்கள் முதன்மை பெற்று அக்கால கட்

டத்தில் தமிழ் நாட்டிற்கும் திருகோணமலைக்கும் நேரடிக்கடல் தொடர்புகள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. இதனாற் சாவகனின் படைகள் மாந்தையில் இறங்கித் தரைவழியாகப் பதவியா (குருந்தி மலைக்கு) செல்ல வேண்டியிருந்திருக்காது. இதனாற் சூளவம்சம் கூறும் குருந்தி மாவட்டத்தைப் பதவியா வுக்குக் கிட்டவுள்ள குருந்தலூர் மலையுடன் ஒப்பிடுவதை விட மாந்தைக்கு வடக்கேயுள்ள குருந்தன் குளத்துடன் ஒப்பிடுவதே பொருத்தமானதாகும். இதில் மற்றொரு இடமான பதி, பதவி யாவைக் குறித்ததெனக் கூறினாலும் அது நிச்சயமாகப் பதவி யாவைத் தான் குறித்ததெனக் கருத முடியாது. அதேவேளை இப் பெயர் கொண்ட இடம் மாந்தைக்குக் கிட்டே இருந்திருக்க முடியாது எனவும் கூற முடியாது. இதை எதிர்கால ஆய்வுகள் எடுத்துக் காட்ட வேண்டும்.

சாவக மன்னனைக் கொன்ற பாண்டியப்படை பின்பு பாண்டியன் இலச்சினையைத் திரிகூடகிரியிலும், கோணமலை யிலும் பறக்கின்ற கொடிகளிற் பொறிக்கப்பட்டதாகக் குடுமியா மலைக் கல்வெட்டில் இருந்து அறிய முடிகிறது. தென்னியங் குளத்திற்குக் கிட்டேயுள்ள ஓர் இடம் கோணமலை எனப் பாரம் பரியமாக அழைக்கப்பட்டு வருவதற்கு ஆதாரங்கள் உள. இத னால் பாண்டியக் கல்வெட்டில் வரும் கோணமலையையும் இங் குள்ள கோணமலையையும் ஒன்றெனக் கருத இடமுண்டு. சாவ கனைக் கொன்ற பாண்டியப்படை அவன் மைந்தனின் முடி சூட்டு விழாவை அநுராதபுரத்தில் நடத்தியதாக மேலும் கல் வெட்டால் அறிய முடிகிறது. இது சாவகனின் ஆதிக்கம் அநு ராதபுரத்தையும் உள்ளடக்கியிருப்பதென்பதை உறுதி செய்வ தோடு அவனின் ஆட்சிப்பீடம் இதற்குக்கிட்டே இருந்ததென் பதையும் மறைமுகமாக உணர்த்துகின்றது.


பாண்டியனின் மேலாதிக்கத்தை ஏற்றுச் சாவகனின் மைந்தன் வட இலங்கையில் ஆட்சி நடாத்தினாலும் காலப் போக்கில் இவனையும் நீக்கிவிட்டுப் பாண்டியரே ஆட்சி அதிகாரத்தைத் தம்வசப்படுத்திக் கொண்டனர். இதைப் பாண்டிய மன்னர்கள் ஆண்டார்கள் என்பதை விட இவர்களின் பிரதிநிதிகளில் ஒருவன் ஆண்டான் எனக் கூறலாம். இதற்குக் கைலாயமாலையில் வரும் கூற்றைத் தொடர்புபடுத்திக் கூறலாம். கைலாய மாலையின் கூற்றுப்படி யாழ்ப்பாண அரசின் முதல் மன்னனான சிங்கையா ரியன் இங்கு வருவதற்கு முன்னால் அவன் பிரதிநிதியாகப் பொன்பற்றியூரைச் சேர்ந்த பாண்டிய மழவன் இங்கு வந்ததா

ச் கூறுகிறது.[34] கைலாய மாலையில் வரும் இக்கூற்றைப் புனை கதை என்றோ, கற்பனை என்றோ கூற முடியாது.[35] பொன் பற்றி என்பது தென்பாண்டி மிழிலைக் கூற்றத்தைச் சேர்ந்த பேருரென்பதை பதின் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களின் ஆவணங்களில் இருந்து அறிய முடிகிறது. மேலும் பாண்டிய மழவன் மட்டுமன்றி மழவச் சக்கரவர்த்தி, மழவராயர் என வழங்கிய பாண்டியப் பிரதானிகள் பலர் பொன் பற்றியூரில் இருந்ததாகத் தெரிகிறது.[36] இதனாற் பாண்டிய மழவனுக்கு முன்பே வேறு பாண்டியப் பிரதானிகள் சாவக மைந்தனின் ஆட்சியை நீக்கிவிட்டு அதிகாரத்தை தம்வசப் படுத்திக்கொண்டனர் எனக் கூறலாம். அவ்வாறு கூறுவதற்கு மேற் கூறப்பட்ட காரணங்களோடு பாண்டியர் ஆட்சியை நினைவுபடுத்தும் பல இடப் பெயர்கள் தென்னியங் குளப் பிரதேசத்தைச் சுற்றி வர இருப்பது மற்றொரு காரணமாகும்.


இன்று தென்னியங்குளம் என அழைக்கப்படும் இப்பிரதேசம் முன்பு தென்னவன் குளம் என்ற பெயரில் இருந்து மருவிய வடிவம் எனக் கூறலாம். தென்னவன் என்பது பாண்டியரைக் குறிப்பதாகும். பாண்டியர் வரலாற்றில் இவர்கள் ஆதிக்கத் திற்கு உட்பட்ட இடங்கள் தென்னவன் குடி, தென்னவன் பட்டி, தென்னவனல்லூர், தென்னவநாடு எனப் பெயர் பெற்றிருந்தமை இதற்குச் சான்றாகும்.[37] தென்னியன் குளத்தின் தொடர்ச்சி யாகப் பாண்டியன் குளமும், பாண்டியன் கல்லு என்ற கிராம மும் அமைந்திருப்பது மேலும் தென்னியன் குளத்தைப் பாண் டயரோடு தொடர்புபடுத்தச் சான்றாக அமைகிறது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட இராசதானிக்குரிய கட்டிட அழிபாடுகளில் ஒன்று செழியாவில் காட்டுப்பகுதியில் உள்ளது. செழியார், செழியன் போன்ற பெயர்கள் பாண்டியர்களைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டதைக் கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் காணலாம். இராசாதி இராசன் காலத்திருவாலங்காட்டுச் சாச னம் ஒன்று இவன் பாண்டியரை வெற்றி கொண்டதற்காக 'செழி யாரைத் தேசு கொள் கோவிராச கேசரிவர்மன்' எனச் சிறப் பித்துக் கூறுவதை இங்கு உதாரணமாகக் காட்டலாம்.[38] கைலாய மாலை சிங்கையாரியனுக்கு முன் யாழ்ப்பாணத்தை ஆளவந்த பாண்டிய மழவன் பொன்பற்றியூரைச் சேர்ந்தவன் எனக் கூறு கிறது. தென்னியங் குளத்திற்குத் தெற்கே மன்னாருக்குக் கிட்ட உள்ள ஒரு இடம் பொன் பரப்பி என அழைக்கப்படுகிறது. இப் பெயர் தென்பாண்டி நாட்டிலுள்ள பொன்பற்றியூருடன்

கொண்ட தொடர்பால் இங்கு ஏற்பட்டுப் பிற்காலத்தில் பொன் பரப்பி] எனத் திரிபடைந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது.

இதுவரை கூறப்பட்ட கலிங்கமாகன், சாவகன், பாண்டியர் ஆகியோர் கால அரசியல் நிகழ்வுகளும், அதற்கான சான்றுகளும் யாழ்ப்பாணத்தில் அரசொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னாற் பூநகரிப் பிராந்தியத்தை அண்டிய பகுதியில் சுதந்திர அரசொன்று தோற்றம் பெற்றுவிட்டதென்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அவ்வாறான அரசொன்று இருப்பதை ஏற்றுக் கொண்டால் இவ்விராச்சியத்திற்கு ஒரு சிறப்புப் பெயர் இல்லாமல் இருந்திருக்க முடியாது. அதை நல்லூருக்கு முற்பட்ட சிங்கை நகராகக் கொள்ளலாமா என்ற கேள்வி எழுகிறது. இதற்கும் சில காரணங்கள் உள. முதலாம் ஜடவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டு வட இலங்கையை ஈழம் எனக் கூறுகிறது.[39] இதற்குச் சற்றுப் பிற்பட்ட கால விஜயநகர காலத்துக் கல்வெட்டு யாழ்ப்பாணத்தை ஈழம் எனக் கூறுகிறது.[40] இரு கல்வெட்டுக்களுக்கும் இடையே ஈழம் பற்றிய வேறுபாடு எதைக் குறிக்கிறது என்பது தெரியவில்லை.



பூநகரியிற் கிடைத்த இலட்சுமி நாணயங்கள்



பூநகரி பள்ளிக்குடாவில் கிடைத்த உரோமர்கால மதுச்சாடி

ஆனாற் பாண்டியன் ஆட்சியில் இந்த ஈழம் வட இலங்கையைக் குறித்து இருக்கலாம் என்பதற்குப் பூநகரியில் உள்ள ஈழஊர், ஈழ வன்குடா போன்ற இடங்கள் சான்றாகும். இவை ஈழம் தொடர்பாகக் கண்டுபிடிக்கப்பட்ட இலங்கைக்கே உரிய முதலாவது சான்றுகளாகும். இவை தற்போதைய வலைப்பாடு கிராமத்திற்கும் பொன்னாவெளிப் பகுதிக்கும் இடைப்பட்ட கடற்பிராந்தியங்களை அண்டிக் காணப்படுகின்றன. இவற்றின் தொடர்ச்சியாகவே கலிங்க மாகனது படைகள் நிலைகொண்டுள்ள புலச்சேரி (புலையர் குடா) அமைந்துள்ளது. கடற்கரையை அண்டிய இவ்விரு இடங்களும் சோழர், பாண்டியர் ஆட்சியில் வர்த்தகத்திற் செல்வாக்குப் பெற்றிருக்கும் என்பதை இங்கு கிடைத்த பலதரப்பட்ட நாணயங்கள் உறுதி செய்கின்றன.

ஈழஊரின் காட்டுப் பகுதியில் காணப்படும் இந்து ஆலயங்களுக்குரிய அழிபாடுகள் இவர்களின் தொடர்பால் அக்காலத்தில் இந்து மதம் இங்கு செல்வாக்குப் பெற்றிருக்கும் எனவும் கருத இடமளிக்கிறது. 16ஆம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயர் ஈழ ஊரில் வாழ்ந்த மக்களைத் தம் மதத்திற்கு மாற்றி இங்கு கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்றைக் கட்டியதாகக் கூறி

யிருப்பது இங்கு நினைவுகொள்ளத் தக்கது.[41] இவ்வீழவூரின் தென் எல்லைக் கிராமமாக வீரபாண்டியன் முனை அமைந்துள்ளது. பாண்டிய மன்னர்கள் தமது ஆட்சியின்போது தமிழ் நாட்டில் உள்ள சில இடங்களுக்குத் தமது பெயரைச் சூட்டியதற்கு ஆதாரங்கள் உள்ளன. இன்றும் தமிழ் நாட்டில் உள்ள வீரபாண்டிய கிராமம் பாண்டிய மன்னர்களின் பெயரால் ஏற்பட்ட ஒன்றாகும்.[42] இதனால் பூநகரியில் உள்ள வீரபாண்டியன் முனை என்ற கிராமமும் சாவகனுக்கெதிராகப் படையெடுத்த வீர பாண்டியன் பெயரால் ஏற்பட்டதெனக் கூறலாம். எனவே பாண்டியக் கல்வெட்டுக்கும் விஜயநகரக் கல்வெட்டுக்கும் இடையிலான ஈழம் பற்றிய வேறுபாட்டை நோக்கும்போது இவை மன்னனின் ஆள்புலத்தைக் குறிக்காது அவனின் அரசிருக்கை அமைந்த இடத்தைக் குறித்தது என எண்ணத் தூண்டுகிறது. விஜய நகர மன்னன் காலத்தில் மன்னனின் இராசதானி யாழ்ப்பாணத்துக்குள் இருந்ததைப் போலப் பாண்டியர் காலத்தில் யாழ்ப்பாணத்திற்குள் மட்டும் இருந்ததாகக் கூறமுடியாது. இதனால் அரிகேசரி பராக்கிரமபாண்டியன் கல்வெட்டில் வரும் சிங்கை யாழ்ப்பாணத்தில் இருந்த தலைநகரைக் குறிக்காது முன்பு பூநகரியில் இருந்த இராசதானியின் தலைநகரைக் குறித்தது எனலாம். இத் தலைநகர் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் அல்லது தமிழ் நாட்டிற் பாண்டிய வம்சம் வலிமை குன்றி விஜய நகரப் பேரரசு எழுச்சியடைந்தமை போன்ற காரணங்களால் இங்கிருந்து நல்லூருக்கு இடமாற்றப் பட்டிருக்கலாம். பூநகரிக்கு நேர்எதிரே அமைந்த நல்லூரின் அமைவிடம் இலங்கையின் பெருநிலப் பகுதியில் இருந்து ஏற்படும் ஆபத்துக்களைத் தடுக்கும் மையமாக அமைந்ததனால் இவ் விடத்தைத் தெரிவுசெய்திருக்க வேண்டும். பூநகரியில் உள்ள நல்லூர், மறவர் குறிச்சி, மட்டுவில்நாடு, சின்னத்தேவன்துறை, வெட்டுக்காடு, வெற்றிலைக்கேணி, கிராஞ்சி, பாலாவி போன்ற பழைய கிராமங்களுக்குரிய பெயர்கள் யாழ்ப்பாணத்துக்குரிய இடப் பெயர்களாக இருப்பதை நோக்கும்போது இவற்றிற் பல இராசதானி மாற்றத்தோடு ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது.

## 6

நல்லூருக்கு முற்பட்ட இராசதானி பூநகரியில் இருந்ததெனக் கூறுவது பொருத்தமாயினும் அவ்வரசு பொலநறுவையில் இருந்து பதவி நீக்கப்பட்ட கலிங்க மாகனாலே தான் முதலிலே தோற்றுவிக்கப்பட்டதென கூறுவது பொருத்தமானதாகத் தெரியவில்லை. அவ்வாறு கலிங்க மாகனாலே தோற்றுவிக்கப்பட்டிருக்குமாயின் மீண்டும் சிங்கள மன்னர்களின் ஆதிக்கம் பொலநறுவையில் ஏற்படுவதைத் தடுக்குமளவிற்குக் குறுகிய காலத்தில் இவ்வரசு வளர்ச்சியடைந்திருக்கும் எனக் கூற முடியாது. அதே வேளை தென்னியங்குளத்திற் கண்டுபிடிக்கப்பட்ட நகரத்தின் அழிபாடுகளைக் கலிங்கமாகனுடனும் பிற்பட்ட மன்னர்களுடனும் தொடர்புபடுத்த இவர்கள் ஆட்சி தொடர்பான இடப்பெயர்கள் பல இக் கட்டிடப்பகுதிகளைக் சுற்றிவர உள்ள பிராந்தியங்களில் இருப்பது காரணமாயினும், இக் கட்டிடங்கள் கலிங்கமாகன் காலத்திலேதான் முதலிற் கட்டப்பட்டதென்பதற்குக் கல்வெட்டுக்களோ பிற உறுதியான சான்றுகளோ இதுவரை கிடைக்கவில்லை. இக் கட்டிடங்களில் உள்ள புடைப்புச் சிற்பங்களின் கலைமரபை நோக்கும்போது இவை கலிங்கமாகன் காலத்துக்கு முற்பட்ட திராவிடக் கலைமரபை ஒத்துக் காணப்படுகின்றன. இக் கட்டிடப் பிரதேசத்தைச் சுற்றிவர உள்ள இடப்பெயர்களை நோக்கும்போது கலிங்கமாகன்கால இடப்பெயர்களை விடச் சோழர் கால இடப்பெயர்களே அதிகமாக உள்ளன. இக் காரணங்கள் கலிங்கமாகன் ஆட்சி வட இலங்கையில் ஏற்படுவதற்கு முன்னரே சிங்கள அரசை எதிர்த்து நிற்கக்கூடிய அரசமைப்பொன்றிற்கான ஆக்கம் வட இலங்கையில் ஏற்பட்டிருந்ததெனக் கருத இடமளிக்கின்றது. அது எப்போது ஏற்பட்டிருக்கலாம் என்பதை அடையாளம் காண இப் பிராந்திய வரலாற்றைப்பின்நோக்கிப் பார்ப்பது அவசியமாகும்.

இலங்கையின் ஆதிகால, இடைக்கால வரலாற்றின் ஆட்சிப்பீட மையங்களாக விளங்கிய அநுராதபுரத்திற்கும், பொலநறுவைக்கும் வடக்கிலமைந்த தமிழர் பிராந்தியம் நாகதீபம், உத்தரப்பிரதேசம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. ஆயினும் இவ் வாட்சிப்பீடமையங்கள் தென்னிலங்கையிலுள்ள உறுகுணைப் பிராந்தியத்துடன் கொண்ட அரசியல் தொடர்புகளைப் பற்றி அடிக்கடி கூறும் பாளி இலக்கியங்கள், இம் மையங்களுக்கு வடக்கிலமைந்த நாகதீபம், உத்திரப் பிரதேசத்துடன்

கொண்ட அரசியல் உறவுபற்றி அதிகம் கூறவில்லை. அதிலும் கி. பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட அரசியல் உறவு பற்றி எதுவும் கூறவில்லை.

கி. பி. 6ஆம் நூற்றாண்டிலே தமிழ்நாட்டிலேற்பட்ட பல்லவ வம்சத்தின் எழுச்சியும், பக்தி இயக்கத்தின் தோற்றமும் தென்னிந்தியாவை மட்டுமன்றிச் சமகால இலங்கையையும் பாதித்தது. தமிழ்நாட்டிலிருந்து ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் செல்வாக்கு இலங்கையிற், பௌத்தம், இந்து என்ற சமய வேறு பாட்டை ஏற்படுத்தி இலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்களை இனம், மொழி, பண்பாடு ஆகிய துறைகளிலே தனித்து வாழ வழிவகுத்தது. அத்துடன் தென்னிந்தியாவில் இருந்து அநு ராதபுர, பொலநறுவை அரசுகளுக்கு எதிராக ஏற்பட்ட படை எடுப்புகளுக்குத் தமிழர்கள் வாழ்ந்த பிராந்தியங்கள் ஆதரவு வழங்கும் தளங்களாக மாறின. இக் காலகட்டத்திலிருந்துதான் உத்தரதேசத்திற்கும் அநுராதபுர அரசுக்கும் இடையிலான அரசியல் உறவுபற்றிப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. அந்த அரசியல் உறவுகள் கூடப் பெரும்பாலும் அநுராதபுர அரசிற்கு எதிராக உத்தரதேசத்திலிருந்து ஏற்பட்ட கிளர்ச்சி கள், படையெடுப்புகள் பற்றியதாகவே அமைந்துள்ளன.

கி. பி. 7ஆம் நூற்றாண்டில் சீல மேகவண்ணன் அநுராத புரத்தில் ஆட்சிசெய்த காலத்தில் (கி பி. 614 — 622) ஸ்ரீ நாக என்னும் தலைவன் தமிழ்நாடு சென்று தமிழர் படையுடன் வந்து உத்தர தேசத்தைக் கைப்பற்ற முயன்றான்.[43] இவனை ஒரு தமிழித் தலைவனாகக் கூறும் சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ ரசின் தோற்றத்தை இச் சம்பவத்தோடு தொடர்புபடுத்தி உள்ளார்[44]. இதேகாலப் பகுதியில் 'மானா' என்னும் சிங்கள இளவரசன் அநுராதபுரத்தில் ஆட்சி செய்துகொண்டிருந்த உறட்டதத்தனுக்குப் பயந்து தன் மனைவியுடன் உத்தரதேசத் தில் பாதுகாப்பாகத் தங்கியிருந்து பின்னர் தமிழ்நாடு சென் றான் எனச் சூளவம்சம் கூறுகிறது. இலங்கையின் ஆதிகால, இடைக்கால வரலாற்றில் உறுகுணையில் இருந்த சிங்கள இள வரசர்கள் பின்னர் அநுராதபுர மன்னர்களாக வருவதையும், அநுராதபுரத்தில் ஆட்சிசெய்து கொண்டிருந்த சிங்கள மன்னர் கள் அன்னியப்படையெடுப்பால், அரண்மனைக் கிளர்ச்சியால் அல்லது உள்நாட்டுக் கலகத்தாற் பாதுகாப்புக்காக உறுகுணைக் குத் தப்பியோடி வாழ்வதையும் காணலாம். இங்கே மானா என்னும் இளவரசர் உறுகுணையில் மறைந்து வாழ வாய்ப்பிருந்

7


தும் அதைக்காட்டிலும் உத்தரதேசம் பாதுகாப்பானது எனக் கருதியமை அனுராதபுர ஆதிக்கம் இங்கு எல்லாக் காலத்திலும் ஏற்படவில்லையோ என எண்ணத்தூண்டுகிறது. கி பி. 8ஆம் நூற்றாண்டில் இரண்டாம் மகிந்தன் அநுராதபுர மன்னனாக இருந்த போது (கி. பி. 777 - 797) உத்தரதேச மாவட்டத் தலைவர்கள் அநுராதபுர அரசிற்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டதுடன் வரி யிறுக்கவும் மறுத்தனர். இக் கலகத்தை மகிந்தன் படைகொண்டு அடக்கியபோதிலும் கலகம் தொடர்ந்து நிகழ்ந்ததாக மகாவம்சம் கூறுகிறது.[45] ஒன்பதாம் நூற்றாண்டில் முதலாம் சேனன் அநுராதபுர மன்னனாக இருந்தபோது (கி. பி. 833) உத்தர தேசத்தில் பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லன் படையெடுப் பொன்று நிகழ்ந்தது. இப்படையெடுப்பில் மாதோட்டத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் இணைந்துகொண்டதாற் பாண்டியப் படையெடுப்பை எதிர்க்கச் சென்ற சிங்களப்படை தோல்வி யடைந்தது.[46] இதைத் தொடர்ந்து சிங்கள மன்னர்கள் பாண்டி யரின் மேலாதிக்கத்தை எற்று ஆட்சி செய்ய நேரிட்டது. இச் சான்றுகள் அனைத்தும் சோழர் ஆட்சி இலங்கையில் ஏற்படமுன் னரே அநுராதபுர அரசை எதிர்க்கக்கூடிய தமிழர்அமைப்பொன்று வட இலங்கையில் (உத்தரதேசத்தில்) தோன்றத் தொடங்கி விட்டது என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. இத்தகைய அரசியல் மாறுதல்கள் ஏற்பட சமகால பல்லவ பாண்டிய வம்சங் களின் அரசியற் செல்வாக்கு இங்கு ஏற்பட்டிருந்தமையும் ஒரு காரணம் எனக் கூறலாம். வடமேல் இலங்கையில் மாதோட்டத்தி லும், பூநகரியிலும் இவ்வம்சங்களின் செல்வாக்கு ஏற்பட்டிருந்த தற்குச் சான்றுகளுண்டு. இதனால் உத்தரதேச அரசியல் வளர்ச்சி யில் இப் பிராந்தியங்களும் தொடர்பு கொண்டிருக்கும் என் பதிற் சந்தேகமில்லை. ஆயினும் இவ் அரசியல் வளர்ச்சிக்கும்




பூநகரியிற் கிடைத்த பல்லவர்கால நாணயம்

பூநகரி தென்னியங்குள இராசதானி அழிபாடுகளுக்குமிடையே தொடர்பு இருந்திருக்குமா என்பதை ஆராய்வதற்குத் தற்போது எதுவித சான்றுகளும் காணப்படவில்லை. ஆனாற் பல்லவ பாண்டிய வம்சங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட சோழர் காலச் செல்வாக்கும், அரசியல் ஆதிக்கமும் இவ்விராசதானி அழிபாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

சோழர் ஆட்சிக்காலம் பொதுப்பட இலங்கை வரலாற்றில் ஒரு முக்கிய காலப்பகுதி எனக் கூறலாம். 77 ஆண்டுகள் மட்டும் (கி. பி. 993 — 1070) பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு சோழர் இலங்கையை ஆட்சி செய்தாலும்கூட இலங்கையின் 200 ஆண்டு கால வரலாறு தென்னிந்தியச் சோழப் பேரரசுடன் இணைந்தே வளர்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியிற் சோழர் இலங்கையில் ஏற்படுத்திய அரசியல், பொருளாதார பண்பாட்டு மாறுதல்களின் விளைவுகள் இலங்கைத் தமிழர் வரலாற்றுடன் நிரந்தரமாக இணைந்துகொண்டன. இதைத் தமிழர்கள் வாழும் திருகோணமலை, பதவியா, மாதோட்டம் ஆகிய இடங்களிற் கிடைத்த சோழராட்சி தொடர்பான சான்றுகள் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.[47] இவைபோன்ற ஒரு முக்கியத்துவத்தைப் பூநகரிப் பிராந்தியமும் பெற்றிருந்ததென்பதை அண்மைக் கால ஆய்வுகள் வெளிக்காட்டியுள்ளன. சோழர் காலத்திலிருந்து இலங்கை தென்னிந்தியத் தொடர்புகளுக்கு மாதோட்டத்துக்குப் பதிலாக ஊர்காவற்றுறை முக்கிய துறைமுகமாகப் பயன்படுத்தப்பட்டதைச் சோழர் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.[48] இத்துறைமுகத்தோடு இதற்குக் கிழக்கே நேர் எதிரே அமைந்த பூநகரியிலுள்ள மட்டிவால் (மட்டுவில் நாடு) புலச்சேரி (புலையர் குடா) ஆகிய இடங்களும் சோழக் கல்வெட்டிற் கூறப்பட்டுள்ளதாற் சோழர் கால இலங்கைத் தென்னிந்தியத் தொடர்புகள் ஊர்காவற்றுறை பூநகரி ஊடாக நடந்ததெனக் கூறலாம். பூநகரியிலுள்ள இவ்விரு இடங்களும் பழைய துறைமுகப் பகுதிகளாகும், இத்துறைமுகங்களூடாகச் சோழர் காலத்திலும், சோழர்களுக்கு முன்பாகவும் இலங்கையுடனான பிறநாட்டு வர்த்தகம் நடைபெற்றதை இத்துறைமுகப் பகுதிகளை அண்டிக் கிடைத்த பல தரப்பட்ட நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன.[49] சோழர்காலத்



பூநகரியிற் கிடைத்த சோழர்கால நாணயங்கள்



பூநகரியிற் கிடைத்த பாண்டிய நாணயங்கள்

தில் இத்துறைமுகங்களையும் யாழ்ப்பாணம் தொட்டு மாந்தை வரையான வடமேற்கிலங்கையும் சோழர் அரசியல் ரீதியாக வெற்றி கொண்டதன்மூலம் மேற்கே அராபிய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தவும் கிழக்கே சிங்கள இராசதானிகளை வெற்றி கொள்ளவும் வாய்ப்பாக இருந்திருக்கும். இதனாற் சோழர் அநுராதபுர அரசை வெற்றி கொள்ள முன்னர் வடமேற்கிலங்கையை முதலில் வெற்றி கொண்டிருந்தனர் எனக் கூறலாம்.

சோழ மன்னர்களில் முதலில் இலங்கை மீது படையெடுத்தவன் முதலாம் பராந்தக சோழனாவான். இவன் இலங்கையின் வடபகுதியை வெற்றி கொண்டமைக்காக "ஈழமும் மதுரையும் கொண்ட கோப்பரசேகரிவர்மன்" என இவனது 38 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டிற் கூறப்பட்டுள்ளது.[50] பூநகரி மண்ணித் தலையிற் கண்டு பிடிக்கப்பட்ட சிவாலயமொன்று முதலாம் பராந்தகன் காலத்திற்குரியதாக இருக்கலாம் என்ற கருத்து இன்று அறிஞர்கள் பலரால் ஏற்கப்பட்டுள்ளது. இதன் மூலம்



**சோழர்கால பூநகரி மண்ணித்தலைச் சிவாலயம் (முன்பக்கம்)**



சோழர்கால பூநகரி மண்ணித்தலைச் சிவாலயம் (பின்பக்கம்)

சோழராட்சி அநுராதபுரத்தில் ஏற்பட முன்னரே அவர்களின் ஆதிக்கம் பூநகரியில் ஏற்பட்டதெனக் கூற முடியும். தமிழ்நாட்டிலுள்ள மண்ணியாறும் அதன் தென்னெல்லையில் உள்ள நல்லூரும், குடமுறுட்டியாறும் பராந்தகன் காலத்திலே வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களாகக் கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன. குஞ்சரமல்லன் என்ற பராந்தகனின் சிறப்புப் பெயர் மண்ணியாற்றின் மறு பெயராக அவன் ஆட்சிக் காலக் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது.[51] இங்கே பூநகரி தென்னியங்குள கட்டிட அழிபாடுகளுக்கு மேற்கெல்லையில் மண்ணியாறும், வடக்கே குடமுறுட்டியாறும் நல்லூரும் இருப்பதைத் தற்செயலான சம்பவம் என கூற முடியாதிருக்கிறது. சோழராட்சியிற் படையெடுப்பாளராக, வர்த்தகராக, நிர்வாக அதிகாரிகளாகத் தமிழ் நாட்டிலிருந்து வந்து இலங்கையிற் குடியேறிய பலதரப்பட்ட மக்கள் தாம் குடியேறிய இடங்களைத் தமிழ் நாட்டுக்குரிய இடப்பெயர் கொண்டு அழைத்தனர் என்பதைப் பதவியா, கந்தளாய், திருகோணமலை, மாந்தை போன்ற இடங்களிற் கிடைத்த சோழக்கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. சோழர் காலத்திற் பெரிதும் புழக்கத்திலிருந்த 18 இடப்பெயர்கள் பூநகரியிலும் தென்னியங்குளம் இராசதானி அழிபாடுகளை அண்டியும் காணப்படுகின்றன. இவ்விடப் பெயர்கள் சோழர் காலத்திற் செறிவான தமிழர் குடியேற்றம் இங்கு ஏற்பட்டதை உறுதி செய்கின்றன. இலங்கையின் ஏனைய பிராந்தியங்களிற் சோழர் கால இடப்பெயர்கள் சோழராட்சியின் பின்னர் பெரிதும் புழக்கத்திலிருந்து மறைந்து விட்டன. ஆனாற் பூநகரியிற் சோழ இடப் பெயர்கள் தொடர்ந்தும் புழக்கத்திலிருப்பதற்குச் சோழருக்குப் பின்பாக கலிங்கமாகன் சாவகன், பாண்டியர் அரசுகள் இங்கிருந்தமை காரணம் எனலாம். இப்பெயர்களிற் பல போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியிலும் முக்கியத்துவம் பெற்றதை அவர்களின் ஆட்சிக்கால ஆவணங்களிற் காண முடிகிறது.

முதலாம் பராந்தக சோழனின் பின் இலங்கைமீது படையெடுத்த சோழ மன்னர்களுள் முதலாம் இராஜராஜ சோழன் சிறப்பாக குறிப்பிடத்தக்கவன். இவன் ஆட்சியிலே தான் அநுராதபுரம் கைப்பற்றப்பட்டு (கி. பி. 993இல்) புதிய தலைநகர் ஜனநாத மங்கலம் என்ற பெயரிற் பொலநறுவைக்கு மாற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து இலங்கை மும்முடிச் சோழ மண்

டலம் என்ற பெயரில் சோழனின் நேரடி நிர்வாகத்தின் கீழ் 77 ஆண்டுகள் (கி. பி. 993 — 1070) ஆளப்பட்டது. இக்காலத்தில் அநுராதபுர கால சிங்கள நிர்வாகமுறை கைவிடப்பட்டு தமிழ் நாட்டிற்குரிய சோழ நிர்வாகமுறை பின்பற்றப்பட்டது. இதன் மூலம் இலங்கை ஒரு மண்டலமாகவும். அவை நிர்வாக வசதிக் காக வளநாடுகள், நாடுகள் எனவும் பிரிக்கப்பட்டன. இதைப் பொலநறுவை, திருகோணமலை, மாந்தை ஆகிய இடங்களிற் கிடைத்த சோழக் கல்வெட்டுக்கள் உறுதியாக்குகின்றன.[52] மாந் தைக்கு வடக்கே பூநகரியிலுள்ள ஓரிடம் இன்று சோழ மண்ட லம் என அழைக்கப்படுகின்றது. இங்கு இப்பெயர் ஏற்படச் சங்க காலத்தில் தமிழ் நாட்டின் கிழக்குக் கரையில் உள்ள சோழ மண்டலத்துடன் கொண்ட தொடர்புகள் காரணம் என வாதி டலாம். ஆனால் இவ்விடத்திற்கும் தென்னியங்குளக் கட்டிட அழிபாடுகளுக்கும் இடையிலான தூரம் (குறுக்காக) மிகக் கிட்டிய தாகும். அத்துடன் தென்னியங்குளக் கட்டிடக் கலைமரபை ஒத்த சில கட்டிடச் சிதைவுகள் சோழ மண்டலத்திலுள்ள சாமத்திய மேடு என்ற இடத்தில் இன்றும் காணப்படுகின்றன. இங்குள்ள பாலியாற்றுப் பகுதியிலே தான் பல வருடங்களுக்கு முன்னர் சோழர் காலத்திற்கேயுரிய லிங்கமும், சதுர வடிவிலமைந்த ஆவு டையும் கண்டு பிடிக்கப்பட்டது. இதனாற் சங்க காலத்தில் இரு பிராந்தியங்களுக்கும் இடையே இருந்த தொடர்பாற் பூநகரியில் இப்பெயர் ஏற்பட்டதெனக் கூறமுடியாதிருக்கின்றது.

பூநகரி சோழ மண்டலத்திற்குத் தெற்கேயுள்ள மாந்தை சோழராட்சியில் இராஜராஜபுரம் எனவும், அதன் நிர்வாகப் பிர தேசம் அருள்மொழித் தேவ வளநாடு எனவும் அழைக்கப்பட் டதை அங்கு கிடைத்த சோழக்கல்வெட்டுக்கள் உறுதி செய்கின் றன.[53] பூநகரி சோழ மண்டலத்திற்கு வடக்கே பூநகரியிலுள்ள ஓரிடம் மட்டுவில்நாடு என அழைக்கப்படுகின்றது. தென்னிந்தியத் திருவாலங் காட்டுச் சாசனத்திற் சோழர் வடமேற்கிலங்கையில் வெற்றி கொண்ட மட்டிவால் என்ற இடம் இம் மட்டுவில் நாட்டையே குறிப்பதாகும். இப்பெயர் இங்கு ஏற்பட சோழ கால நாடு என்ற நிர்வாகப் பிரிவு இங்கு இருந்ததே காரணம் எனலாம்.[54] எனவே சோழர் கால இரு நிர்வாகப் பிரிவுகளுக்கு மத்தியிற் சோழமண்டலம் என்ற பெயர் பூநகரியில் இருப்பதைக் கொண்டு சோழரின் பிரதான நிர்வாக மையம் இங்கிருந்த தெனக் கூறமுடியும். இலங்கையிற் சோழராட்சியின் தலைநகரா கப் பொலநறுவை விளங்கிய போதிலும் அவர்களது அரசியல்

இராணுவ, வர்த்தக நடவடிக்கைகள் திருகோணமலையில் இருந்த தற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. இதே போலப் பூநகரி யுள்ளிட்ட வடமேற்கிலங்கை சோழராட்சியின் முக்கிய அரசியல் இராணுவ நிர்வாக மையமாக விளங்கியதெனக் கூறலாம். இதை மேலும் உறுதிப்படுத்துவதில் முதலாம் இராஜேந்திர சோழனின் இலங்கை வெற்றி பற்றிக்கூறும் மாதோட்டக் கல்வெட்டை இங்கு எடுத்து நோக்கலாம். இக்கல்வெட்டு ஊர்காவற்துறைக் கோட்டையிற் கண்டுபிடிக்கப்பட்டாலும் இது மாதோட்டத்தி லேயே பொறிக்கப்பட்டதென்பதைக் கவ்வெட்டின் வாசகத்திலி ருந்து அறிய முடிகின்றது. இதில் 1070இல் இராஜேந்திர சோழ னின் படைகள் முழு இலங்கையையும் வெற்றி கொண்ட செய்தி கூறப்பட்டுள்ளதோடு, இவ்வெற்றியைத் தொடர்ந்து அநுராத புரத்தைக் கடைசியாக ஆட்சி செய்த 5ஆம் மகிந்தனும், அவன் மனைவியும், அரச சொத்துக்களும் கைப்பற்றப்பட்ட செய்தி களும் கூறப்பட்டுள்ளன.[55] பொதுவாக இலங்கையிற் சோழர் அடைந்த வெற்றிகள் பற்றிய செய்திகள் தென்னிந்தியாவிலே பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் இக்கல்வெட்டு மாதோட்டத்திற் பொறிக்கப்பட்டிருப்பதை நோக்கும்போது சிங்கள மன்னர்களை வெற்றிகொள்வதற்கு வடமேற்கிலங்கை சோழருக்கு நிரந்தரத் தளமாக விளங்கியதே காரணம் எனலாம். இதைச் சோழராட்சி பொலநறுவையில் மறைந்ததன் பின்னர் நடந்த சம்பவங்கள் மேலும் உறுதி செய்கின்றன.

1070இல் சோழரின் நேரடியாட்சி பொலநறுவையில் வீழ்ச்சி யடைந்ததைத் தொடர்ந்து சிங்கள மன்னர்களின் ஆட்சி மீண்டும் ஏற்பட்டது. அவ்வாறு ஆட்சி செய்த மன்னர்களுள் முதலாம் விஜயபாகு (1055 – 1110). முதலாம் பராக்கிரமபாகு (1153 – 1186) நிசங்கமல்லன் போன்ற மன்னர்கள் (1887 – 1196) சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். ஆயினும் இவர்களின் ஆட்சியைப் பாது காப்பதில் சோழர் காலத்தில் இருந்த வேளைக்காறர், வலங்கை இடங்கை, சிறுதனம் முதலான தமிழ்ப் படைப் பிரிவுகளே பெரி தும் காரணமாகும். இதற்குச் சோழராட்சியின் பின்னர் இப் படை வீரர்கள் இலங்கையில் நிரந்தரமாகத் தங்கிக்கொண் டதே காரணமாகும். அநுராதபுர அரசு காலத்திற் சில சிங்கள மன்னர்கள் உத்திர தேசத்தின் மீது படையெடுத்து தற்காலிக மான சில வெற்றிகள் அடைந்ததற்குச் சான்றுகள் உண்டு. ஆனாற் சோழரின் பின் பொலநறுவையில் ஆட்சி செய்த சிங்கள

மன்னர்கள் உத்தர தேசத்தின் மீது படையெடுத்தற்கோ அல்லது அவர்களின் அரசியல் நிர்வாகம் இங்கு இருந்த தற்கோ சான்றுகள் காணப்படவில்லை. வரலாற்றாசிரியர்கள் சிலர் நயினாதீவிற் கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் பராக்கிரம பாகுவின் கல்வெட்டு அவன் ஆதிக்கம் உத்தர தேசத்தில் இருந்த தற்குச் சான்றாகக் காட்டியுள்ளனர்.[56] ஆனால் அது தமிழில் வர்த்தகம் பற்றிய செய்தியையே கூறுகிறது. நிகாயசங்கிரக என்ற சிங்கள நூல் யாழ்ப்பாண மன்னர்கள் தென்னிலங்கையி லுள்ள ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறை பெற்றதாகக் கூறுகின்றது. கொட்டகம என்ற இடத்திற்கிடைத்த தமிழ்ச் சாசனம் ஒன்று யாழ்ப்பாண மன்னர்கள் சிங்கள அரசை வெற்றி கொண்டது பற்றிக் கூறுகிறது.[57]

இதனால் யாழ்ப்பாண அரசின் ஆதிக்கப்பரப்பு தென்னி லங்கை வரை இருந்ததெனக் கூறுவதற்கில்லை. அது போன்றே நயினாதீவிற் கிடைத்த பராக்கிரமபாகுவின் கல்வெட்டையும் நோக்க வேண்டும். மாறாகச் சோழராட்சி தொடர்பான உத்திர தேசத்திலுள்ள சான்றுகள் சோழராட்சியின் பின்னர் சிங்கள மன்னர்கள் ஆதிக்கம் இங்கு ஏற்படவில்லை என்பதையே சுட் டிக் காட்டுகின்றன. இதற்கு முதலாம் விஜயபாகு ஆட்சியில் நடைபெற்ற சம்பவம் ஒன்றை இங்கு எடுத்துக் காட்டலாம். விஜயபாகு தன்நாட்டுச் சிங்களத் தூதுவர்கள் சோழரால் அவ மதிக்கப்பட்டதற்காகத் தமிழ் நாட்டின் மீது படையெடுக்கு மாறு மாகாதீர்த்த, மட்டிகாவட்ட தீர்த்த ஆகிய இடங்களில் நிலை கொண்டு இருந்த தமிழ் படை வீரர்களை தன் தூது வர்கள் மூலம் வேண்டினான். இதை ஏற்கமறுத்த தமிழ்ப்படை வீரர்கள் அத்தூதுவர்களைக் கொன்றதோடு, பொலநறுவை மீது படையெடுத்து அதைக் கைப்பற்றித் தீக்கிரையாக்கியதோடு விஜயபாகுவின் சகோதரியையும் புதல்வர்களையும் சிறைப் பிடித்தனர். இதனால் விஜயபாகு அங்கிருந்து உறுகுணைக்குத் தப்பியோடியதாகச் சூளவம்சம் கூறுகின்றது.[58] இதிலே தமிழ்ப் படை வீரர்கள் தங்கியிருந்த இரு இடங்களும் வடமேற்கிலங்கை யில் அமைந்துள்ளன என்பதைச் சூளவம்சத்தின் கூற்றிலிருந்து அறிய முடிகிறது. பாளியில் மாகாதீர்த்த என்ற இடம் மாதோட் டத்தைக் குறிப்பதாகும். மட்டிகாவட்டதீர்த்த என்ற மற் றைய இடம் பூநகரி மட்டுவில் நாட்டைக் குறித்ததெனக் கருத இடம் உண்டு. இங்கிருந்த படை வீரர்கள் பொலநறுவையை

கைப்பற்றியபோது சோழராட்சி இங்கிருந்திருக்கவில்லை. அதே வேளை தமிழ் நாட்டிற்கூட சோழவம்சம் வலிமை குன்றி அதன் பேரரசின் எல்லைகளைப் பாதுகாப்பதிற் சோழ மன்னர்கள் பல கஸ்டங்ளை எதிர்நோக்கினர். இதனால் இப்படையெடுப்புக்குச் சோழரின் ஆதரவு இருந்திருக்குமெனக் கருதமுடியாது. அதே வேளை இங்கிருந்த சோழப்படை வீரர்கள் சோழ மன்னர்களின் கட்டுப்பாட்டில் இருந்திருப்பராயின் தமிழ் நாட்டிற் சோழர் எதிர்கொண்ட பல படையெடுப்புகளில் இவர்களைப் பயன்படுத்தியிருப்பினர். இதனால் இவர்களை உத்தரதேசத்தில் நிரந்தரமாக வாழ்ந்த படை வீரர்கள் எனக் கூறலாம். அப்படை வீரர்களே சோழரைப் பொலநறுவையில் இருந்து அகற்றிய முதலாம் விஜயபாகுவைச் சில ஆண்டுகளுக்குள் அங்கிருந்து உறுகுணைக்கு தப்பியோடச் செய்தனர் என்றாற் சோழராட்சியைத் தொடர்ந்து கலிங்கமாகனுக்கு முன்னரே வலுவான அரசொன்று உத்தரதேசத்தில் இருந்தது காரணம் எனலாம். அப்படியாயின் கலிங்கமாகனுக்கு முற்பட்ட அரசையும், தலைநகர் சிங்கையும் சோழருடன் தொடர்புபடுத்த இடமுண்டு. இதற்குச் சார்பாக யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழிலக்கியங்களை இங்கு நோக்குவது அவசியமாகும்.

## 7

யாழ்ப்பாண வைபவமாலை கி. பி. 8ஆம் நூற்றாண்டளவில் விஜயனின் உறவினனான உக்கிரசிங்கன் சோழ இளவரசியான மாருதப்புரவல்லியைத் திருமணம் செய்து சில காலம் கதிரமலையிலிருந்து ஆட்சி புரிந்ததன் பின்னர் தலைநகரைச் செங்கடநகரிக்கு மாற்றினான் எனக் கூறுகிறது[39]

இந் நூலைப் பதிப்பித்த குல சபாநாதன் சிங்கைநகர் என்னும் பெயரையே மயில்வாகனப் புலவரோ அவருக்குப்பின் ஏடெழுதிய எவரோ செங்கடநகர் என மாற்றி விட்டனர் எனக் கூறியுள்ளார். இக்கருத்தை வரலாற்றறிஞர்கள் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதன்மூலம் கதிரமலைக்குப் பின்னர் சிங்கநகர் தலைநகராக விளங்கியதெனக் கூறலாம். அது யாழ்ப்பாணத்திற்கு வெளியே வன்னிப் பிராந்தியத்திலிருந்ததாகக் வையா

பாடல் கூறுகிறது.[61] இக்கூற்றை மேலும் உறுதிப்படுத்த யாழ்ப்பாண வைபவமாலையில் வரும் செய்தியை இங்கு எடுத்து நோக்கலாம்.

> " அக்காலத்திற் சோழநாட்டிலிருந்து இரண்டு கண்களும் குருடனாகிய கவிராகவன் என்னும் யாழ்ப்பாணன் செங்கட நகரிலிருந்து அரசாட்சி செலுத்தும் வாலசிங்க மகாராசன் பேரிற் பிரபந்தம் பாடிக் கொண்டு போய் யாழ் வாசித்துப் பாடினான். அரசன் அதைக் கேட்டு மிக்க சந்தோஷம் கொண்டு அவனுக்குப் பரிசாக இலங்கையின் வடதிசையிலுள்ள மணற்றிடர் என்னும் நாட்டைக் கொடுத்தான்.[62]

இக்கதை 16ஆம் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிவீரராகவனை மையமாக வைத்துக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இதிற் பிற்கால வரலாற்றுச் செய்திகளுடன் பழைய வரலாற்றுக் கதைகளும் இணைந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. இதிற் சிங்கநகருக்கு (செங்கடகையருக்கு) வடக்கிலுள்ள நாடு மணற்றிடர் எனக் கூறப் பட்டுள்ளது. யாழ்ப்பாணம் எனும் பெயர் 15ஆம் நூற்றாண்டில் ஏற்படும் வரை இப்பிராந்தியம் மணற்றி, மணவை, மணற்றிடர் எனஅழைக்கப்பட்டதற்கு ஆதாரமுண்டு. இங்கே சிங்கை நகருக்கு வடக்காக உள்ள நாட்டைச் (யாழ்ப்பாணத்தை) சோழ மன்னன் வழங்கியதன் மூலம் சிங்கைநகர் யாழ்ப்பாணத்துக்கு தெற்கே இருந்ததென்பது புலனாகின்றது. பூநகரியிலுள்ள தென்னியங்குள இராசதானியின் அழிபாடுகள் கலிங்க மாகனுக்கு முன்னரே சோழ வரலாற்றுடன் தொடர்புடையதாக இருப்பதால் கதிரமலையின் பின்னர் சோழர் வருகையோடு தோன்றிய தமிழரசையும் அதன் தலைநகர் சிங்கையும் பூநகரியிலிருந்ததெனக் கூறலாம். அவ்வாறு கூறுவதற்குச் சிங்கை நகர் அல்லது சிங்கை என்ற பெயர் ஏற்படுவதற்கான காரணங்களையும் இங்கு நோக்குவது அவசியமாகும்.

## 8

யாழ்ப்பாண மன்னர்களின் ஆரம்பத் தலைநகர் சிங்கை, சிங்கை நகர் என்ற பெயர் பெற்றதற்கு கலிங்கவம்சத்துடன் இதன் ஆரம்ப கால மன்னர்கள் தொடர்புடையவர்களாக இருந்ததே காரணம் என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

இதற்கு ஆதாரமாகச் சில சான்றுகளைக் கூறியுள்ளனர். இதில் ஒன்று கலிங்க தேசத்திலே சில வம்சங்கள் சிங்கபுரத்தைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்ததால் வட இலங்கையில் அரச மைத்த கலிங்க மாகனும் அதன் தலைநகருக்குத் தன் தாய் நாட்டை நினைவு படுத்தும் வகையில் இப் பெயரை இட்டி ருக்க வேண்டும். இரண்டாவது கலிங்க வம்சத்து நாணயங்க ளைப் போல யாழ்ப்பாண மன்னர்களால் வெளியிடப்பட்ட நாண யங்களிலும், கொடிகளிலும் நந்தி இலச்சினையும், பிறையும், நட் சத்திரமும் இடம் பெற்றுள்ளன. மூன்றாவது யாழ்ப்பாணத்து மன்னர்களுடைய விருதுப் பெயர்களான கங்கைஆரியன், கங் கை நாடான் போன்ற பெயர்கள் கலிங்கத் தொடர்புடையவை யாக இருப்பது.[63] இம்மூன்று காரணங்களை வைத்து யாழ்ப்பாண அரசையும் அதன் தலைநகர் சிங்கையையும் கலிங்க நாட்டுடன் தொடர்பு படுத்த வாய்ப்பிருப்பினும் இவற்றை வேறுபடுத்திக் காட்டவும், ஆதாரங்கள் உண்டு. பொலநறுவையிற் கலிங்கமா கன் உட்பட பல கலிங்க வம்சத்தவர்கள் நீண்ட காலம் ஆட்சி புரிந்தும் கூட அவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட நகரங்களில் ஒன்று தானும் சிங்கபுரம் என்ற பெயர் பெற்றதாகத் தெரியவில்லை. மேலும் இவர்கள் ஆட்சியிற் பல தரப்பட்ட நாணயங்கள் வெளி யிடப்பட்டும் கூட அந் நாணயங்களில் ஒன்றாவது கலிங்க நாட் டுச் செல்வாக்கைப் பெற்றதாகத் தெரியவில்லை. இவர்களுட் கலிங்கமாகன் பொலநறுவையிலோ அல்லது வட இலங்கையிலோ ஆட்சி புரிந்த காலத்தில் இவனால் வெளியிடப்பட்டதெனக் கூறக் கூடிய நாணயங்கள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நிலையில் வட இலங்கையில் அரசமைத்த கலிங்கமாகன் இங்கு மட்டும் தன் தாய் நாட்டு மரபைப் பின்பற்றினான் எனக் கூறு வதை ஏற்றுக் கொள்ளுவது கஸ்ரமாகத் தோன்றுகிறது, இதே வேளை யாழ்ப்பாண மன்னர்களின் நாணயங்களையும் தலைநகர் சிங்கையையும் கலிங்க நாட்டுடன் மட்டும் தொடர்பு படுத்துவது பொருத்தமானதாகத் தெரியவில்லை. இலங்கையிற் கலிங்கத் தொடர்பு ஏற்பட முன்னரே பல்லவர், பாண்டியர், சோழர் ஆட்சியில் வெளியிடப்பட்ட நாணயங்களில் நந்தி இலட்சனையும் பிறையும், நட்சத்திரமும் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். இந்நாணயங்களின் சில அம்சங்களைப் பின்பற்றியே பிற்காலத் திற் சிங்கள மன்னர்கள் தமது நாணயங்களை வெளியிட்டுள்ள னர். அப்படியாயின் ஏன் யாழ்ப்பாண மன்னர் கால நாணயங் களில் இவை இடம்பெற்றிருக்க முடியாது. அண்மையில் யாழ்ப் பாண மன்னர்கால நாணயங்கள் பற்றி விரிவான ஆய்வை

மேற்கொண்ட பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் இவர்களின் ஆரம்ப கால நாணயங்கள் சோழ நாணயங்களின் அமைப்பை ஒத்திருப்பதாகக் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

யாழ்ப்பாண மன்னர்களின் விருதுப் பெயர்களான கங்கை ஆரியன், கங்கை நாடான் என்பன கலிங்கத்துடன் தொடர்பு படுத்திக் காட்டப்பட்டுள்ளன. ஆனாற் கலிங்கத்தை வெற்றி கொண்ட சோழ மன்னர்களும் அந்த நாட்டுடன் தொடர்பான விருதுப் பெயர்களைப் பெற்றுள்ளனர். உதாரணமாக இராசேந்திரசோழனின் விருதுப் பெயர்களில் ஒன்று கங்கை கொண்ட சோழன் என்பதாகும்.[64] இதனாற் சோழத் தொடர்பாலும் இவ விருதுப் பெயர்கள் யாழ்ப்பாண மன்னர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. சிங்கை அல்லது கிங்கைநகர் என்ற பெயர் ஏற்படக் கலிங்க நாட்டுச் சிங்கபுரத் தொடர்பே காரணம் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனாற் சிங்கபுரம் என்ற பெயர் கலிங்க நாட்டுத் தலைநகரங்களுக்கு மட்டும் இருக்கவில்லை. தமிழ் நாட்டிற் சோழத் தலைநகரங்களுக்கும் இப்பெயர் இருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக முதலாம் பராந்தகன் காலத் தலைநகரங்களில் ஒன்று சோழ சிங்கபுரம், சிங்கபுர நாடு எனப் பெயர் பெற்றிருந்ததை இங்கு குறிப்பிடலாம்.[65] இதனாற் சிங்கை அல்லது சிங்கைநகர் என்ற பெயர் ஏற்படச் சிங்கபுரத் தொடர்பே காரணம் எனக்கொண்டால் அது கலிங்க தொடர்பால் ஏற்பட்டதென்பதை விடச் சோழத் தொடர்பால் ஏற்பட்டதெனக் கூறுவதே பெருமளவு பொருத்தமாகும். இலங்கையிற் கலிங்கவம்சத்து மன்னர்கள் பலர் நீண்டகாலம் ஆட்சி செய்தும் கூட அவர்களின் தாய்நாட்டுப் பெயர்களை நினைவு படுத்தும் பெயர்கள் இலங்கையில் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதிலும் வடஇலங்கையிற் கலிங்கமாகனைத் தவிர ஏனைய கலிங்க மன்னர்களின் ஆதிக்கமோ அல்லது கலிங்க நாட்டுச் செல்வாக்கோ ஏற்பட்டதெனக் கூறக் கூடிய சான்றுகள் இல்லையென்றே கூறலாம். ஆனாற் சோழர் ஆட்சியில் வட இலங்கை அவர்களது கூடிய செல்வாக்கிற்கு உட்பட்டிருந்ததுடன் அவர்களது ஆதிக்கத்திற்குட்பட்ட பல நகரங்கள் சோழர்காலப் பெயர்களைப் பெற்றிருந்தன. இதைப் பொலநறுவை, பதவியா திருகோணமலை, மாதோட்

டம் ஆகிய இடங்களிற் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன.[66] இதேபோல் சிங்கபுரம் என்ற பெயரும் சோழர் காலத்தில் இலங்கையில் உள்ள ஒரு நகரத்துக்கு இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

ஆனால் தமிழ் நாட்டிலேயே சோழராட்சிக் காலத்தில் கொங்கு மண்டலத்திலுள்ள நாடு ஒன்று சிங்கை என்ற பெயரால் அழைக்கப்பட்டதற்குச் சான்றுகளுண்டு. இப் பெயரை நோக்கும்போது தமிழரசின் ஆரம்பத் தலைநகரான சிங்கை அல்லது சிங்கைநாடு என்ற பெயர் சிங்கபுர என்ற பெயரிலிருந்து மருவிய வடிவமென்று கூறுவதை விட கொங்கு மண்டலத்திலுள்ள சிங்கை என்ற நாட்டுடன் கொண்ட தொடர்பால் ஏற்பட்டதெனக் கூறுவது பெருமளவு பொருத்தமாகத் தெரிகிறது.

சிலப்பதிகாரம் பண்டைய தமிழகத்திலுள்ள நாடுகளாக சேர, சோழ, பாண்டிய மண்டலங்களுடன் தொண்டை மண்டலத்தையும் கொங்கு மண்டலத்தையும் கூறுகிறது.[67] சோழ மண்டலத்திற்கும் சேர மண்டலத்துக்கும் இடையில் அமைந்த இக் கொங்கு மண்டலம் சங்ககாலத்தில் கொங்கு வேளிர் என்ற சிற்றரசர்களால் ஆளப்பட்டது. இந்நாட்டின்மீது சேர, சோழ, பாண்டியச் சிற்ரசர்கள் அடிக்கடி படையெடுத்த போதிலும் கி. பி. 6ஆம் நூற்றாண்டு வரை ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட சுதந்திர நாடாகவே விளங்கிற்று. ஆனால் கி. பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து பல்லவ, பாண்டிய, சோழவம்சங்கள் தென்னிந்தியாவில் பேரரசாக எழுச்சியடைந்த போது கொங்கு நாடு தனது தனித்துவத்தை இழந்து அப்பேரரசுகளின் நிர்வாக ஆதிக்கத்துச்கு உட்பட்டது.

தமிழ் நாட்டில் சோழப் பேரரசின் ஆதிக்கத்தை ஆரம்பித்து வைத்த முதலாம் ஆதித்த சோழன் கி. பி. 894இல் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து வெற்றி கொண்டான் எனகொங்கு தேசராசாக்கள் வரலாறு என்ற நூலும் சேலம், திருச்செங்கோடு ஆகிய இடங்களில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன.[68] முதலாம் பராந்தக சோழன் ஆட்சியில் இக் கொங்கு நாடு முழுவதும் சோழர் ஆதிக்கத்துள் வந்ததை இவனாட்சி தொடர்பாகக் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. முதலாம் இராஜராஜசோழன் ஆட்சியில் அவன் ஆதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகள் ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்

றுள் கொங்கு நாடு 'முடிகொண்ட சோழ மண்டலம்' என்ற பெயரைப் பெற்றது. இப்பெயர் வீரராசேந்திர சோழன் காலத்தில் 'அதிராஜக மண்டலம்' எனவும், விக்கிரமசோழன் காலத்தில் வீர சோழ மண்டலம்எனவும், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழ கேரளமண்டலம் எனவும் பெயர். பெற்றது.[69] சோழரது ஆதிக்கம் கொங்கு நாட்டில் நீண்டகாலம் நிலவியதால் சோழரது ஆட்சி அங்கு மறைந்த பின்னர் எழுச்சி பெற்ற சிற்றரசுகள் தம்மைச் சோழ வம்சத்தவர் எனக் கூறிக் கொண்டதோடு சோழ மன்னர்களுக்குரிய விருதுப் பெயர்களையும், பட்டப் பெயர்களையும் சூடிக்கொண்டனர். இதனால் இவர்கள் கொங்குச் சோழர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். கி. பி. 12ஆம் நூற்றாண்டில் சோழ வம்சம் தென்னிந்தியாவில் வீழ்ச்சியடைந்த போது அங்கு எழுச்சியடைந்த பிறவம்சங்கள் கொங்கு நாட்டின் மீது மாறிமாறி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர்.

இக்கொங்கு நாட்டிற்கும் இலங்கைக்குமிடையே ஆதிகாலம் தொட்டு நெருங்கிய உறவு இருந்ததற்குச் சான்றுகளுண்டு. ஆனால் இவ்வுறவு பற்றி வரலாற்று ஆசிரியர்கள் யாரும் ஆய்வு செய்ததாகத் தெரியவில்லை. அதிலும் தமிழரசின் தோற்றம் தொடர்பான ஆய்வில் கொங்குநாடு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதாகக் கூறுவதற்கில்லை. கொங்கு நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட உதயணன் பெருங்கதை ஆசிரியர் (இவர் 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கருதப்படுகிறது) தமிழ் நாட்டை சுற்றிவர உள்ள நாடுகளாக ஈழத்தையும், சிங்களத்தையும் கூறுகிறார். இக்கூற்றை இலங்கைக்கும் கொங்கு நாட்டிற்குமிடையேயிருந்த உறவுக்கு ஒரு சான்றாக எடுத்துக் கொள்ளலாம். 10ஆம் நூற்றாண்டில் சோழராட்சி இலங்கையிலும் கொங்குநாட்டிலும் நிலவியபோது இருநாடுகளுக்குமிடையே நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் இருந்ததாகத் தெரிகிறது. இதை உறுதிப்படுத்தும் கொங்கு நாட்டு நாணயங்கள் சில மன்னர் மாவட்டத்தில் கிடைத்துள்ளன.[70] 11ஆம் 12ஆம் நூற்றாண்டில் சோழர் கால வணிககணங்கள் இலங்கையில் செயல்பட்டபோது கொங்குநாட்டவர் அவ்வணிக கணங்களில் வணிகர்களாக, போர்வீரர்களாக, தொழில் வினைஞர்களாகச் செயல்பட்டனர் என்பதை இலங்கையில் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன.[71] 13ஆம் நூற்றாண்டில் வீரபாண்டியன் வட இலங்கை மீது படையெடுத்து அங்கு ஆட்சி செய்துகொண்டு

இருந்த சாவகமன்னனை வெற்றி கொண்டதாக குடுமியமலைக் கல்வெட்டுக் கூறுகிறது. இதே செய்தி கொங்கு நாட்டிலுள்ள வீரபாண்டியனது கல்வெட்டில் கொங்கு நாட்டு வெற்றியோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளது. அக்கூற்றுப் பின்வருமாறு அமைந்துள்ளது. [72]

'கொங்கீழம் கொண்டு கொடுவடுகு கோடழித்துக்
கங்கை இருகரையும் காவிரியும் கைக்கொண்டு'

கி. பி. 1607ஆம் நூற்றாண்டுக்குரிய சேதுபதிகப் பட்டயத்தில் கொங்கு நாட்டுடன் ஈழமும், யாழ்ப்பாணமும் தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளது. [73]

'ஈழமுங் கொங்கும் யாழ்ப்பாணப் பட்டணமும்
இம்மண்டமுமளித்து கெச வேட்டை கொண்டருளிய'

இவ்வாறு கூறப்பட்டமைக்கு ஈழத்தில் யாழ்ப்பாணம் தனி இராச்சியமாக இருந்ததே காரணம் எனக் கூறப்படுகிறது. [74] இவ்வாறே 17ஆம் 18ஆம் நூற்றாண்டுக்குரிய மராட்டிய செப்பேடுகளில் கொங்கு நாட்டுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் கொங்கணேசுவரர் கோயிலில் உள்ள மூன்று செப்பேடுகள் தஞ்சைக் கோயிலுக்கு கொங்கு நாடும், ஈழமும், யாழ்ப்பாணமும் செய்த திருப்பணிகள் பற்றிக் கூறுகின்றன. [75] 17ஆம் 18ஆம் நூற்றாண்டில் எழுந்த வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை முதலான தமிழ் நூல்கள் கொங்கு நாட்டிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறியவர்கள் பற்றிக் கூறுகின்றன. இந்நூல்களை அடிப்படை ஆதாரமாக வைத்து யாழ்ப்பாணக் குடியேற்றம் பற்றி ஆராய்ந்த சிலர் அதற்குச் சான்றாக கொங்கு நாட்டிலுள்ள காரமடை, கல்லாரை, கொங்கு நாடு, தொளசம் பட்டி, மானா முதலான இடப்பெயர்கள் யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவு (காராமட்டை) மல்லாகம் (கல்லாரை), ஆவரங்கால் (கொங்கவோடை), மயிலிட்டி (தொளசம்பத்தை) ஆகிய இடங்களில் இருப்பதைச் சுட்டிக்காட்டினர். [76] கொங்கு நாட்டிற்குரிய இடப்பெயர்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி அந்நாட்டிலுள்ள குதிரமலை, கோகர்ணம், குருந்தமலை முதலான இடப்பெயர்கள் [77] வட இலங்கையில் புத்தளம், மன்னார் பிராந்தியம் (குதிரமலை), முல்லைத்தீவு, பூநகரி (குருந்தலூர்மலை, குருந்தன்குளம்), திருகோணமலை (கோகர்ணம்) ஆகிய இடங்களில் இருப்பதைக் காணலாம். இவ்விடப் பெயர்கள் மூன்றும் 13ஆம் நூற்றாண்டுக்கு முன்பாக இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம்

பெற்றிருந்ததைப் பாளி இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. இதேபோல் கொங்குமண்டலக் காங்கேயன் நாட்டிற்கும் காங்கேசன்துறைக்கு மிடையிலான தொடர்பு ஆராயத்தக்கது. எனினும் இவ்விடப் பெயர்கள் அனைத்தையும் கொங்கு நாட்டைத் தொடர்புபடுத்தும் உண்மைச் சான்றுகளாகவோ, பழமையானவையென்றோ அல்லது ஒரு பக்க உறவினால் மட்டும ஏற்பட்டனவயன்றோ திட்டவட்டமாகக் கூறமுடியாதிருக்கிறது. ஆனால் யாழ்ப்பாண வேளாள சமூகத்தின் ஒரு பிரிவினர் தம்மைக் கொங்கு வேளாளர் எனவும்; சிங்கமாப்பாணர் பரம்பரையெனவும் இன்றும் கூறுவதை நோக்கும் போது கொங்கு நாட்டுடனான தொடர்பை நிராகரிக்கவும் முடியாதிருக்கிறது.

மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் கொங்கு நாட்டிற்கும் இலங்கைக்கும், சிறப்பாகத் தமிழ் மக்களிற்குமிடையிலான உறவை வெளிப்படுத்தி நின்றாலும், அந்த உறவில் சோழராட்சி கொங்கு நாட்டில் நிலவியபோது இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கன. சங்ககாலத்தில் கொங்குமண்டலத்தில் 24 நாடுகள் காணப்பட்டன. சோழர் காலத்திலும் அந்நாடுகள் பெரும்பாலும் அதே பெயரில் அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.[78] அந்நாடுகளில் காங்கேயன் என்ற நாட்டிற்கு சிங்கையென்ற மறுபெயர் இருந்தது.[79] இப்பெயர் சோழராட்சிக்கு முன்னர் இருந்ததற்குச் சான்றுகள் காணப்படவில்லை. அப்படியிருந்தாலும் சோழராட்சியில் இச்சிங்கை நாடு சில சிறப்பியல்புகளைப் பெற்றிருந்தது. இச்சிங்கை நாட்டைச் சேர்ந்த கொங்கு வேளாளத் தலைவர்கள் பல்லவருக்கும், சோழருக்கும் இடையே நடந்த போராட்டத்தில் பல்லவருக்கு எதிராகப் போரிட்டு சோழருக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்ததால் சோழ மன்னர்கள் இவர்களுக்கு பல்லவராயர் என்னும் சிறப்புப்பட்டத்தைக் கொடுத்தனர். இதனால் இவர்கள் சிங்கப் பல்லவராயர் எனவும் அழைக்கப்பட்டனர்.[80] இவர்கள் சிறந்த தமிழ் அறிவு உடையவர்களாகவும், தமிழ்ப் புலவர்களைப் போற்றும் பெருங்குணம் படைத்தவர்கள் எனவும் கொங்கு நாட்டு இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் சிறந்த போர் வீரர்களாகவும் இருந்ததினால் இவர்களின் வீரத்தைப் பாராட்டி சோழர் கொடுத்த மறுபெயர் மும்முடிப் பல்லவராயர் என்பதாகும்.[81]

இக்கொங்குநாடு சோழருடன் இணைந்து அரசியலிலும், வர்த்தகத்திலும் ஈடுபட்டதினால் சோழராட்சி இலங்கையில் இடம் பெற்ற போது இக்கொங்கு நாட்டின் செல்வாக்கு முற்

பட்ட காலங்களைவிட கூடுதலாக இருந்திருக்குமெனக் கருத இடமுண்டு. முதலாம் பராந்தகன் ஆட்சியில் நடைபெற்ற சோழ, சிங்களப் போராட்டத்தில் கொங்கு நாட்டுக் குறுநில மன்னனும் கீழைப்பழுவூரில் இருந்த சிற்றரசனாகிய பழுவேட்டரையன் கண்டன் அமுதன் வெள்ளூரில் சிங்களப்படைவீரர்களை எதிர்த்துப் போரிட்டு சிங்களப்படையைத் தோற்கடித்தான்.[82] இரண்டாம் பராந்தகன் ஆட்சியில் அவன் சார்பாக கொங்கு நாட்டைச் சேர்ந்த பராந்தகன் சிறிய வேளான் இலங்கைமீது படையெடுத்தான். இவன் இலங்கையில் நடந்த போராட்டத்தில் சிங்களப்படையிடம் தோல்வியடைந்து இறந்தான் என்ற செய்தி ''ஈழத்துப்பட்ட கொடும்பாளூர் வேளான் சிறிய வேளான்'' என்ற கல்வெட்டின் மூலம் அறியக் கிடக்கிறது.[83] முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் மதுரையில் நடந்த சிங்கள சோழப் போராட்டத்தில் கொங்குநாட்டுப் படை வீரர்கள் சோழருடன் இணைந்து சிங்களப் படைவீரர்களைத் தோற்கடித்தனர்.[84]

சோழருடன் அரசியலில் இணைந்து செயல்பட்ட கொங்கு நாட்டவர் சோழர் காலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த ஞானதேசிகர், திசயாயிரத்துஐநூற்றுவர் முதலான வணிக கணங்களில் வர்த்தகர்களாகவும், இராணுவப் படை அமைப்புக்களாகவும் செயல்பட்டதை இலங்கையிற் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. இலங்கையில் வாகல்கட என்ற இடத்தில் கிடைத்த திசையாயிரத்துஐநூற்றுவரின் மெய்கீர்த்திச் சாசனத்தில் கொங்குநாட்டு வாழ்ப்படை வீரரை இவ்வணிக கணம் கொண்டிருந்ததாக கூறுகிறது.[85] இவ்வணிக கணங்கள் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் மட்டுமன்றி இராணுவப் படையமைப்புக்களை வைத்திருக்கவும், சுயாட்சி கொண்ட நகரங்களை, பட்டினங்களை உருவாக்கவும் கலாசார முயற்சியில் ஈடுபடவும் காரணமாக இருந்தன. இதில் அங்கத்துவம் வகித்த பல்வேறு சமூகப் பிரிவினரும் சோழராட்சியில் தென்னிந்தியாவின் பல்வேறு இடங்களில் இருந்து படைவீரர்களாக, நிர்வாகிகளாக, கலைஞர்களாக இலங்கையில் வந்து குடியேறியோரும் 1070இல் சோழராட்சி பொலநறுவையிலிருந்து அகன்றதன் பின்னர் மீண்டும் தென்னிந்தியாவுக்குச் சென்றதாகத் தெரியவில்லை. மாறாக அவர்களில் பெரும்பாலானோர் இலங்கையிலேயே நிரந்தரமாக தங்கிக்கொண்டனர். அவ்வாறு

குடியேறியோர் தாம் வாழ்ந்த இடங்களைத் தமது தாய்நாட்டிற்குரிய இடப்பெயர்களைக் கொண்டு அழைத்தனர் என்பதை பதவியா, வாகல்கட, தக்கணம், மாதோட்டம் ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. அவ்வாறு நிரந்தரமாகக் குடியேறியவர்களில் கொங்கு நாட்டவரும் அடங்குவர் எனக் கருதுவதற்கு இடமிருப்பதால் அவர்களும் தாம் வாழ்ந்த இடங்களைத் தமது தாய்நாட்டு இடப்பெயர்களைக் கொண்டு அழைத்திருக்கலாம் அல்லது கொங்குநாட்டுக்கு சோழரிட்ட புதிய பெயர்களை இலங்கையிலும் பயன்படுத்தியிருக்கலாம். அவ்வாறு கருதுவதற்குச் சில காரணங்கள் உண்டு.

கொங்கு மண்டலச் சிங்கைநாட்டு வேளாளத் தலைவன்களுக்கு சோழரிட்ட மறுபெயர் மும்முடிப் பல்லவராயர் என்பதாகும். இப்பெயர் முதலாம் இராஜராஜ சோழனின் விருதப் பெயர்களில் ஒன்றாகும். இவன் ஆட்சியில் இலங்கைக்கு இடப்பட்ட மறுபெயர் மும்முடிச் சோழமண்டலம் என்பதாகும். கொங்கு நாட்டிற்கு வட எல்லையில் உள்ள நகரமொன்று சோழர் காலத்தில் இராஜராஜபுரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. [86] இலங்கையில் மாதோட்டத்தில் சோழர் கால நகரமொன்று இராஜராஜபுரம் என்ற பெயர் பெற்றிருந்ததை அங்கு கிடைத்த கல்வெட்டுக் கூறுகிறது. கொங்கு நாட்டில் கோட்டூர் என்ற பெயரில் ஓர் இடம் இருந்ததாக அங்கு கிடைத்த கல்வெட்டுக் கூறுகிறது. [87] இலங்கையிலும் சோழர் கால நிர்வாகத்தில் கோட்டூர் நாடு என்ற பெயரில் ஒரு கிராமம் இருந்ததாக தென்னிந்தியச் சாசனம் கூறுகிறது. [88] கொங்கு நாட்டில் சோழராட்சியில் நல்லூர், சிங்கநல்லூர் (இப்பெயர் பாண்டி நாட்டிலும் உண்டு.) என்ற பெயரில் பல இடங்கள் இருந்துள்ளன. [89] இலங்கையிலும் நல்லூர் என்ற பெயர் சோழர் காலத்தில் இருந்துள்ளதென்பதை யாழ்ப்பாணக் கோட்டையில் கிடைத்த முதலாம் இராஜேந்திர சோழன் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. [90] இதனால் பூநகரியில் உள்ள நல்லூர் என்ற இடப் பெயரையும் சோழர் காலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு. எனவே சோழராட்சியில் கொங்குநாட்டில் வழக்கத்தில் இருந்த சில இடப்பெயர்கள் சமகாலத்தில் இலங்கையில் புழக்கத்தில் இருந்ததை நோக்கும்போது சோழவரலாற்றோடு பெரிதும் ஈடுபாடு கொண்ட சிங்கைநாடு என்ற பெயரும்

ஏதோ ஒரு காரணத்தால் சோழத் தொடபால் இலங்கையிலும் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. அவ்வாறு கருதுவ தற்கு இன்னுமொரு சான்றை இங்கு எடுத்து ஆராயலாம்.

சோழராட்சியில் பல்லவராயன் என்ற பட்டப் பெயர் சிங்கை நாட்டு வேளாளத் தலைவர்களுக்கு சோழ மன்னர் இட்ட மறு பெயராகும். இப்பெயர் காலப் போக்கில் ஏனைய சோழப்படை வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பெயரிடப்பட்டதாகத் தெரிகி றது. இவர்களுக்கு சோழ மன்னர்களால் வழங்கப்பட்ட ஊர் களும் கிராமங்களும் தான் பெரும்பாலும் இன்று தமிழ் நாட் டில் பல்லவராயன் பேட்டை, பல்லவராயன் நெந்தில், பல்லவ ராயன் சாலை, பல்லவராயளந்தம், பல்லவராயன் என்ற பெய ரில் அழைக்கப்படுகிறது.[91] இலங்கையிலும் சோழராட்சியின் போது பல்லவராயன் என்ற பெயரில் அதிகாரிகள் இருந்ததற் குச் சான்றுகளுண்டு. பொலநறுவை 2ஆம் சிவதேவாலயத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று சோழ நிர்வாகத்தில் உயர் பதவி வகித் தவன் பல்லவராயன் எனக் கூறுகிறது[92] இரண்டாம் இராசாதி ராஜா சோழன் காலத்தில் வடமேற்கிலங்கை மீது படையெடுத்து மட்டிவாழ் (பூநகரி மட்டுவில் நாடு) புலச்சேரி (பூநகரி புலையர் குடா) மாதோட்டம், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களை வெற்றி கொண்ட சோழப் படைத்தளபதி பல்லவராயன் என பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டுக் கூறுகிறது.[93] இன்று பூந கரியிலுள்ள பல்லவராயன், பல்லவராயன் கட்டு, பல்லவரா யன் ஆறு முதலிய இடப்பெயர்களை இப்படைத் தளபதியின் பெயரால் ஏற்பட்டதெனக் கருத இடமுண்டு. இப்பெயர் ஆரம் பத்தில் சிங்கை நாட்டுப் பல்லவராயரைக் குறித்து நின்றாலும் அந்நாட்டவர் தான் இலங்கையிலும் இருந்தார்கள் எனக் கூற முடியாது. ஆனால் அந்நாட்டவரைக் குறித்த பெயர் சோழராட் சியில் இலங்கையிலும் பயன்படுத்தினர் என நிச்சயப்படுத்திக் கூறலாம். இதனால் பல்லவராயரின் தாய்நாட்டுப் பெயரான சிங்கையும் சோழர் காலத்தில் இலங்கையில் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

நான்காம் மகிந்தன் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த காலத் தில் (கி. பி. 956-972) தென்னிந்திய மன்னன் வல்லபன் நாக தீபத்தின் மீது படையெடுத்து தோல்வியடைந்தான். எனச் சூள வம்சம் கூறுகிறது. இப்படையெடுப்பை நடத்திய தென்னிந்திய

மன்னனைச் சிலர் ராஷ்கூடர் எனவும், பலர் இரண்டாம் பராந்தக சோழன் எனவும் கூறுவர்[94]. இவன் யாராக இருந்தாலும் படையெடுப்பு நடந்த இடம் யாழ்ப்பாணம் என்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. அப்படையெடுப்பு ஊர்காவற்றுறை ஊடாக நடந்ததெனக் கூறப்படுகிறது. இதே காலப்பகுதியில் இரண்டாம் பராந்தக சோழன் சார்பாக கொங்கு நாட்டு பராந்தகன் சிறிய வேளான் வட இலங்கைமீது படையெடுத்து அந்த நாட்டில் உயிர்துறந்தான் என சோழக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது[95]. சூளவம்சம் கூறும் சம்பவமும், சோழக் கல்வெட்டில் இடம் பெற்றுள்ள சம்பவமும் ஏறத்தாழ ஒரே காலப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. இதேவேளை நாகதீபத்தில் குறிப்பாக பூநகரியுள்ளிட்ட வடமேற்கிலங்கையில் சோழர் தொடர்பாகக் கிடைக்கும் சான்றுகள் சோழரின் ஆதிக்கம் அநுராதபுரத்தில் ஏற்பட முன்னர் வடமேற்கிலங்கையில் ஏற்பட்டுவிட்டதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. சூளவம்சத்தில் முக்கியப்படுத்திக் கூறப்படாத முதலாம் பராந்தகனின் வட இலங்கை வெற்றி அவனது 38ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ''மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்'' எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளமைக்கு வடமேற்கிலங்கையில் அவனது ஆதிக்கம் நிலை கொண்டிருந்தமை காரணமாக இருக்கலாம். இச் சான்றுகள் நான்காம் மகிந்தன் ஆட்சியில் நாகதீபத்தின் மீது படையெடுத்த மன்னனை இரண்டாம் பராந்தகன் என எண்ணத் தூண்டுகிறது. இப் படையெடுப்பை சோழர் சார்பாக நடத்தியவன் கொங்குநாட்டைச் சேர்ந்த பராந்தகன் சிறிய வேளாளன் என அறிகிறோம். இவன் கொங்கு நாட்டவனாக இருப்பினும் அங்குள்ள சிங்கைநாட்டு வேளாளத் தலைவர்களும் சோழருக்குத் திறை செலுத்தும் சிற்றரசர்களுமே சோழப் படையெடுப்புக்களில் பெரும்பாலும் பங்குகொண்டனர். இதனாலேயே இவர்கள் சிங்கைப்பல்லவராயர் எனவும், மும்முடிப் பல்லவராயர் எனவும் சோழரால் அழைக்கப்பட்டனர்[96]. இதனால் இலங்கைமீது படையெடுத்த கொங்கு நாட்டுப் படைத் தளபதியும் சிங்கை நாட்டுக் குரியவனாக இருக்கலாம். சோழ வரலாற்றில் அவர்கள் படையெடுத்த நாடுகள் பெரும்பாலும் சோழ மன்னர்கள் பெயரால், அல்லது அதற்குத் தலைமைவகித்த படைத் தளபதிகள் பெயரால் அல்லது அவர்களின் தாய்நாட்டுப் பெயரால் அழைக்கப்பட்டதற்குச் சான்றுகளுண்டு. இங்கே கொங்குநாட்டுப் படைத் தளபதியைச் சிங்கை நாட்டுக்குரியவன் எனக் கொண்

டால் அவன் வட இலங்கையில் போரிட்டு மரணம்அடைந்ததை நினைவுபடுத்த அவன் தாய்நாடான சிங்கை என்ற பெயரை அவன் இறந்த காலத்தில் அல்லது இவனுக்குப் பின் வட இலங்கையை வெற்றிகொண்டு சோழ நிர்வாகத்துடன் இணைத்த முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் ஏற்பட்டு இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இதை எதிர்கால ஆய்வுகள் வெளிக் காட்டலாம்.

## 10

மேற் கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது பொதுப்பட்ட சில முடிவுகளுக்கு வரக்கூடியதாக இருக்கிறது. (1) தமிழரசின் ஆரம்ப தலைநகரான சிங்கை அல்லது சிங்கைநாடு என்பது யாழ்ப்பாணத்துக்கு வெளியே வன்னிப் பிராந்தியத்தில் குறிப்பாக பூநகரியில் இருந்ததெனக் கூறமுடியும். (2) தென்னியங்குளத்திலுள்ள புராதன நகரத்தின் அழிபாடுகள் சிங்கை நகராக அல்லது சிங்கை இராசதானி காலக் கட்டிடங்களாக இருக்க முடியும். 3. ஆரியச்சக்கரவர்த்திகளால் நல்லூரில் அரசொன்று தோற்றுவிக்கப்படமுன்னர் வட இலங்கையில் ஆட்சி புரிந்த கலிங்கமாகன், சாவகன், சாவகனின் மைந்தன், பாண்டியப் பிரதானிகள் ஆகியோரதும் அரசாக சிங்கையே விளங்கியதெனக் கூறலாம். (4) கலிங்கமாகன் பொலநறுவையில் ஆட்சிசெய்தபோது அவனுக்குச் சார்பான அரசொன்று, வட இலங்கையில் தோன்றியிருந்ததெனக் கூறலாம். அவ்வரசையே கலிங்கமாகன் பொலநறுவையில் இருந்து பதவி நீக்கப்பட்டபின்னர் ஆட்சிசெய்தான். இதனால் இவ்வரசின் தோற்றத்தைச் சோழர் காலத்துடன் தொடர்புபடுத்துவது பல நிலைகளில் பொருத்தமாகத் தெரிகிறது. (5) சிங்கை அல்லது சிங்கைநாடு என்ற பெயர் எற்பட கலிங்கமாகன் காலக் கலிங்க நாட்டு சிங்கபுரத் தொடர்பே காரணம் எனக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. மாறாகத் தமிழ்நாட்டில் கொங்கு மண்டலச் சிங்கைநாட்டுடன் சோழர் காலத்தில் கொண்ட தொடர்பே காரணம் எனக் கூறுவது பொருத்தமாக அமையலாம். (6) எதிர்காலத்தில் சிங்கை இராசதானி பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமானால் மேற்கூறப்பட்ட புதிய கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

## அடிக்குறிப்புக்கள் :

1. Rasanayagam, C, **Ancient Jaffna** (Madras : 1929) pp. 7 - 26.
2. *ஞானப்பிரகாசர் சுவாமி,* **யாழ்ப்பாண வைபவ விமர்சனம்,** *(அச்சுவேலி ; 1928) ப. 47 - 48.*
3. *இந்திரபாலா. கா.* **' யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலமும் சூழ்நிலையும் ' இளங்கதிர்,** *21* **ஆவது ஆண்டு** *மலர் (பேராதனை) ப. 37.*
4. Pathmanathan, S. **The kingdom of Jaffna** (Colombo : 1978)
5. *இரகுநாதையர், இ. சி (பதிப்பு)* **செகராசசேகரமாலை,** *(யாழ்ப்பாணம் 1942), செய்யுள் 36.*
   ................................ *(பதிப்பு)* **செகராசசேகரம்,** *அச்சுவேலி : 1932) ப. 78.*
6. Gunawardhena, W. F. (ed) **Kohila sandisaya.** (Colombo : 1924) vers 246.
7. *சபாநாதன், குல (பதிப்பு)* **யாழ்ப்பாண வைபவமாலை,** *(கொழும்பு : 1953) பக். 27 ; ஐம்புலிங்கம் (பதிப்பு)* **கைலாயமாலை** *(சென்னை 1939), ப. 7.*
8. Queyrox, F. de. **The Temporal and and spirtual of Ceylon** (Tr) by Perera, S. G. (Colombo 1930) P. 50.
9. *இந்திரபாலா. கா.* **மு. கூ. நூ.** *ப.* **52.**
10. **E T. p. 20.**
11. A R E for 1901 No. 128 of 1901.
12. **முருகவேள் பன்னிரு திருமுறை** *2ஆம் தொகுதி, (கதிர்காமம்) பக். 554 - 580.*
13. Gunawardhena, W. F. op. cit, Vers. 246
14. *இந்திரபாலா, கா.* **மு. கூ. நூ.** *ப. 55.*
15. **மேற்படி** *ப. 53.*

16. Rasnayagam, C. op. cit, pp. 310 - 311.
17. ஞானப்பிரகாசர், சுவாமி மு. கூ. நூ. பக். 67 – 68.
18. புஷ்பரட்ணம், ப. 'யாழ்ப்பாண இராச்சியத்தின் தலை நகர் – புதிய நோக்கு' முத்தமிழ் விழா மலர் (யாழ்ப்பாணம் : 1991) ப. 41.
19. இந்திரபாலா, கா. மு. கூ. நூ. ப. 54.
20. மேற்படி ப. 55.
21. மேற்படி
22 Ragupathy P. **Early settlements in Jaffna** (Madras: 1987) PP. 32 - 38.
23. இந்திரபாலா, கா. மு. கூ. நூ. ப. 20.
24. C. V. ch. LXXX, VV 61 - 79.
25. இந்திரபாலா, கா. மு. கூ. நூ. ப. 23.
26. Nilakanta sastri, K. A. 'The Ceylon expedetion of Jatavarman vira panidya ' **Proceedings and Transactions of the eight all Indian oriental conference,** (Bangalore 1937) PP. 511 - 512.
27. இந்திரபாலா, கா. மு. கூ. நூ. ப. 56.
28. புஷ்பரட்ணம், ப. மு. கூ. நூ. ப. 43.
29. C. V. 83 : 67
30. Nilakanta sastri, K. A. **The Colas,** (Madras 1984) p. 408.
31. Pathmanathan, S **op. cit** p. 106.
32 புஷ்பரட்ணம், ப. மு. கூ. நூ. ப. 30.
33. இந்திரபாலா, கா. மு. கூ. நூ. ப. 30.
34. **கைலாயமாலை** ப. 12.
35. பத்மநாதன், சி. ', ஈழத்தமிழ் வரலாற்று நூல்கள்'' **இளங்கதிர்**, 21ஆவது ஆண்டு மலர் (பேராதனை) ப. 117.
36. மேற்படி
37. சேதுப்பிள்ளை, ரா. பி. **தமிழக ஊரும் பேரும்**, (சென்னை 1956) ப. 93.
38. SII, Vol. III, No. 205, Vers 76 - 79.

39. **ARE** for 1894, No 166 of 1894.

40. *இந்திரபாலா. கா. மு. கூ. நூ ப. 44.*

41. Friar Paulda Trinidate, **Chapter on the Introduction Christianity to Ceylon** (Chilaw 1972) P. 240.

42. *சேதுப்பிள்ளை, ரா. பி. மு. கூ. நூ. ப. 96.*

43. C. V. 44, 70 - 75.

44. *ஞானப்பிரகாசர் சுவாமி. மு. கூ. நு. ப. 47, 48.*

45. C. V. 48, 83 - 85.

46. மேற்படி, *50, 12, - 20, 37 - 42.*

47. Pathmanathan, S. "Chola rule in Sri Lanka " **Proceeding of the Fourth International Conference of Tamil Studies**. (Jaffna 1980) P. 19 - 36.

48. **EI** Vol, XXII P. 86 - 92.

49. புஷ்பரட்ணம். ப. "சோழர்காலக் குடியேற்றங்களால் தோன்றிய பூநகரி இடப்பெயர்கள்" **யாழ். பல்கலைக்கழக கல்விசார் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை** *(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1992) ப. 3.*

50. SII, Vol, 11. p. 14, No. 35

51. *சதாசிவபண்டாரத்தார் தி. வை.* **பிற்கால சோழர் வரலாறு** *(அண்ணாமலை 1974) ப. 56.*

52. *புஷ்பரட்ணம் ப. மு. கூ. நூ. ப. 10.*

53. **Pathmanathan** S. **op - cit.** 1980 **P. 22**

54. *புஷ்பரட்ணம், ப. மு. கூ. நூ. 1992, ப. 8.*

55. *இந்திரபாலா, கா.* யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள் **சிந்தனை** *(பேராதனை 1968) பக் 41 - 48.*

56. **மேற்படி**

57. *பத்மநாதன், சி.* தமிழ்ச்சாசனங்களும் ஈழவரலாற்று ஆராய்ச்சியும் 'இளந்தென்றல்' *(கொழும்பு 1972) ப. 30.*

58. C. V. 60, 34-36.

59. *சபாநாதன், குல. மு. கூ. நூ.*

60. மேற்படி

61. நடராசா, க. செ. (பதிப்பு) வையாபாடல், (கொழும்பு 1980) பாடல் 17.

62. சபாநாதன், குல. மு. கூ. நூ.

63. இந்திரபாலா, கா. மு. கூ. நூ. பக். 35 – 37.

64. ARE for, 1894, No. 166 of 1894.

65. சதாசிவ பண்டாரத்தார், தி. வை. மு. கூ. நூ. ப. 56.

66. Pathmanathan, S. op. cit 1980 P. 19 - 36.

67. கோவையூர்கிழார், கொங்கு நாட்டு வரலாறு முதலிரண்டு பகுதிகள், (கோயம்புத்தூர் 1972) ப. 9.

68. மேற்படி ப. 171.

69. மேற்படி ப. 25.

70. Condrington H. W. Ceylon Coins and currency, (Colombo 1924) p. 89.

71. பத்மநாதன் சி. ''இலங்கைத் தமிழ் வணிக கணங்ககளும் நகரங்களும்'' சிந்தனை தொ 11 இத 11 (யாழ்ப்பாணம் 1984) ப. 50.

72. கோவையூர்கிழார் மு. கூ. நூ. ப. 33.

73. Rasanayagam C. op. cit. p. 248.

74. இராசு செ. தஞ்சைமராட்டியர் செப்பேடுகள் (தஞ்சாவூர் 1983) ப. 69.

75. மேற்படி

76. சிவானந்தன், யாழ்ப்பாணக்குடியேற்றம் (கோலம்பூர் 1932) ப. 20.

77. சிவகளை சுப்பையா. கொங்கு நாட்டுக் கோயில்கள் (சென்னை 1 967) ப. 77 – 80.

78. மேற்படி ப. 237.

79. புலவர் குழந்தை. கொங்கு நாடும் தமிழும் (திருச்சிராப்பள்ளி 1953) ப. 39.

80. மேற்படி

81. மேற்படி

82. SII. 231 of 1926.

83. மேற்படி, Vol. V. No. 980.

84. Paranavitana, S. (ed) History of Ceylon pt II, (Colombo 1959) P. 504.

85. பத்மநாதன், சி. மு. கூ. நூ. 1984 ப. 63.

86. கோவையூர்கிழார். மு. கூ. நூ. ப. 40.

87. சிவகளை சுப்பையா. மு. கூ. நூ. ப. 104.

88. SII Vol. iv. No. 1388.

89. கோவையூர்கிழார். மு. கூ. நூ, ப. 40.

90. E, T. Vol I pt p. 32.

91. சேதுப்பிள்ளை ரா. பி. மு. கூ. நூ. ப. 123.

92. SII. Vol. IV No. 1403, 1404

93. EI. Vol. XXII, p. 86 - 92

94. இந்திரபாலா, கா. மு. கூ. நூ.

95. SII Vol. V. No. 980.

96. புலவர் குழந்தை. மு. கூ. நூ. ப. 40.

திருமகள்
அழுத்தகம்
சுன்னாகம்